தினமலர்

## துல்லிய பண்ணை திட்டத்தில் ரூ.1.28 கோடி நிதி ஒதுக்கீடு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,06:28 IST

தேனி: துல்லிய பண்ணை திட்டத்தில் மாவட்டத்திற்கு ஒரு கோடியே 28 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.பொது விவசாயிகளுக்கு 512 எக்டேர் நிலத்தில் துல்லிய பண்ணை திட்டம் செயல்படுத்த ஒரு கோடியே 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாயும், ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு இத்திட்டத்தை 128 எக்டேரில் செயல்படுத்த 25 லட்சத்து 60 ஆயிரம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு 5 ஆயிரம் ரூபாய் மதிப்பில் விதைகளும், 15 ஆயிரம் ரூபாய்க்கு நீரில் கரையும் உரங்களும் வழங்கப்படும். மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்து தரப்படும் என தோட்டக்கலை துணை இயக்குனர் முருகன் தெரிவித்துள்ளார்.

## திருந்திய நெல் சாகுபடி முறை விவசாயிகள் ஆர்வம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,05:10 IST

காஞ்சிபுரம்:திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் பயிரிட, விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.நெல் சாகுபடியில், புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகமாகியுள்ளன. திருந்திய நெல் சாகுபடி முறையில், நெல் பயிரிடுவோருக்கு அதிக மகசூல் கிடைக்கிறது; செலவும் குறைவு. ஒரு ஏக்கருக்கு 8 கிலோ விதையில், அதிக விளைச்சல் தருவதால், இம்முறையில் நெல் சாகுபடி செய்ய, விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.பிளாஸ்டிக் தட்டில் பாலித்தீன் கவரை பரப்பி, அதில் மணலுடன் கலக்கப்பட்ட நெல் விதைகளை, ஒரு நாள் முழுவதும் வைத்தால் மறு நாள் முளைவிடும். அவற்றை 15 நாட்கள் சேற்று நிலத்தில் வைத்து, தண்ணீர் தெளிக்க வேண்டும். ஒன்பதாவது நாளில் பூச்சிக்கொல்லி, நோய் தடுப்பு மருந்துகளை தெளிக்க வேண்டும். 15வது நாளில் நாற்றை எடுத்து, இயந்திரம் மூலம் நடவு செய்ய வேண்டும். இடைவெளி விட்டு சீராக நடவு செய்வதால், 20, 40வது நாட்களில் களை எடுக்கும் கருவி மூலம், களைகள் அகற்றப்படுகின்றன.

தற்போது சம்பா பட்டத்தில் ஆடுதுறை (ஏ.டி.டி.,37), ஏ.டி.டி.,43-ஏ.டி.டி.,45, ஆகிய குறுகிய கால

பயிர் நாற்றுகள் விடப்பட்டு, விவசாயிகளின் நிலத்தில் நேரடியாக நடவு செய்யப்படுகின்றன. செவிலிமேடு, விப்பேடு, கீழம்பி, முட்டவாக்கம், முசரவாக்கம், காலூர் போன்ற கிராமங்களில், திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்ப முறையில் விவசாயிகள் நெல் பயிரிட்டுள்ளனர்.

**வேளாண்மை விரிவாக்க திட்ட அறிமுக கூட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,05:38 IST

செய்யூர்:இ-வேளாண்மை விரிவாக்க திட்ட அறிமுகக் கூட்டம் மழுவங்கரனையில் நடந்தது.கூட்டத்திற்கு ஊராட்சி தலைவர் கிருஷ்ணமூர்த்தி தலைமைத் தாங்கினார். விரிஞ்சிபுரம் வேளாண் அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் செந்தில்குமார் வரவேற்றார்.கோவை வேளாண் பல்கலைக் கழக இ-வேளாண்மை திட்ட அலுவலர் கார்த்திகேயன் திட்ட விரிவாக்கத்தின் நோக்கம், பயன்கள் குறித்து பேசும்போது, ""வேளாண் விஞ்ஞானிகளையும் விவசாயிகளையும், இணைக்கும் திட்டமே இ-வேளாண்மை திட்டம். விவசாயிகளின் பயிர் சார்ந்த பிரச்னைகளுக்கு அறிவியல் நிலைய வேளாண் விஞ்ஞானிகள் ஆலோசனைகளை வழங்குவார்கள்," என்றார்.

**ஊராட்சிகளில் சிறப்பு கிராம சபை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,05:39 IST

காஞ்சிபுரம்:"கால்நடைகளுக்கு நூறு சதவீதம் கோமாரி நோய் தடுப்பூசி போடுவதற்காக, நாளை முதல் சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடத்தப்படும்' என, மாவட்ட ஆட்சித் தலைவர் சித்ரசேனன் தெரிவித்துஉள்ளார்.இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், ""காஞ்சிபுரம், உத்திரமேரூர், வாலாஜாபாத், குன்றத்தூர், ஸ்ரீபெரும்புதூர், ஆகிய ஒன்றியங்களில் 11ம் தேதி, புனித தோமையார் மலை, மதுராந்தகம், அச்சிறுபாக்கம், சித்தாமூர், ஆகிய ஒன்றியங்களில் 12ம் தேதி, திருப்போரூர், திருக்கழுக்குன்றம், லத்தூர், காட்டாங்கொளத்தூர் ஒன்றியங்களில் உள்ள, அனைத்து ஊராட்சிகளிலும் 13ம் தேதி காலை, சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெறும்," என்று கூறப்பட்டுள்ளது.

**கேழ்வரகு சாகுபடியில்விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,07:12 IST

விழுப்புரம்:விழுப்புரம் சுற்று வட்டார கிராமப் பகுதிகளில் கேழ்வரகு சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.கேழ்வரகு உணவிற்கு அனைத்து தரப்பினரிடமும் நல்ல வரவேற்பு உள்ளது. இதனால் ஒரு மூட்டை கேழ்வரகு 2 ஆயிரம் ரூபாய் வரை விலை போகிறது. விழுப்புரத்தை சுற்றியுள்ள தென்னமாதேவி, பிடாகம், திருவாமாத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் கேழ்வரகு பயிர் செய்துள்ளனர். தற்போது கேழ்வரகு கதிர்கள் முற்றியுள்ளதால் விவசாயிகள் ஆர்வமுடன் அறுவடை செய்து வருகின்றனர்.இது நியாயமா? இப்பகுதி விவசாயிகள் அறுவடை செய்யும் தானியங்களை வாகன போக்குவரத்துள்ள சாலைகளில் உலர வைக்கின்றனர். இதனால் போக்குவரத்து பாதிப்பு மற்றும் விபத்துகளும் ஏற்படுகின்றன. இவற்றை தவிர்க்க விவசாயிகள் அரசு சார்பில் அமைத்துள்ள சிமென்ட் களங்கள் மற்றும் வேறு இடங்களை பயன்படுத்த முன் வர வேண்டும்.

**ஆத்தூரில் மஞ்சள் ஏலம் ரூ.1 கோடிக்கு விற்பனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,01:53 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த, மஞ்சள் ஏலத்தில், 2,520 மூட்டை மஞ்சள், ஒரு கோடி ரூபாய்க்கு விற்பனையானது.ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் தனியார் கமிஷன் மண்டிகளில், சனிக்கிழமை தோறும், மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது.அதன்படி, நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், விரலி மஞ்சள், குவிண்டால் குறைந்தபட்சம், 4,940 ரூபாய்க்கும், அதிகபட்சம், 7,899 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள், குவிண்டால் குறைந்தபட்சம், 4,519 ரூபாய்க்கும், அதிகபட்சம், 6,740 ரூபாய்க்கும், பனங்காலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 12 ஆயிரத்து, 509 ரூபாய்க்கும், அதிகபட்சம், 13 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையானது.விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்த, 2,520 மூட்டை மஞ்சள், ஒரு கோடி ரூபாய்க்கு விற்பனையானது. ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு, 1,079 ரூபாயும், உருண்டை மஞ்சள், 121 ரூபாயும் விலை குறைந்தது.

## இயற்கை உரமாக பயன்படும் கழிவுகள்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,01:49 IST

ஆத்தூர்: ராமநாதபுரம் மாவட்ட செம்மறி ஆடுகள் வளர்ப்போர், "நடோடிகள்' போன்று, பல்வேறு மாவட்டங்களுக்கு சென்று, ஆடுகள் மேய்த்து வருகின்றனர். ஆத்தூர் பகுதியில், செம்மறி ஆடுகளின் கழிவுகள், விளை நிலங்களில் இயற்கை உரமாக பயன்படுத்துவதால், விவசாயிகள் மத்தியில், "கிராக்கி' ஏற்பட்டுள்ளது.ராமநாதபுரம், சிவகங்கை உள்ளிட்ட தென் மாவட்டங்களில், செம்மறி, மாலாடுகள் அதிகளவில் வளர்க்கப்படுகிறது. அம்மாவட்டங்களில், கால்நடை மேய்ச்சல் நிலம் போதியளவில் இல்லாததால், ஆடு வளர்ப்பவர்கள், சேலம், ஆத்தூர், தலைவாசல், சின்னசேலம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் உள்பட, பல்வேறு மாவட்டங்களுக்கு சென்று, நீர் நிலை மற்றும் தரிசு நிலங்களில், ஆடுகளை மேய்த்து வருகின்றனர்.செம்மறி ஆடு வளர்ப்பவர்கள், "நடோடிகள்' போன்று, பல்வேறு மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்து, ஆடு மேய்த்து வருவது அதிகரித்துள்ளது. அதன்படி, ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதியில், விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு பிரதான தொழிலாக உள்ளது.இப்பகுதியில், மேய்ச்சல் நிலம், ஏரி, ஆறு, நீரோடை மற்றும் தரிசு நிலங்கள் அதிகளவில் உள்ளன. அதனால், ராமநாதபுரம் செம்மறி ஆடு வளர்ப்பவர்கள், ஆத்தூர், தலைவாசல் பகுதியில் முகாமிட்டு, ஆடு மேய்த்து வருகின்றனர். இந்த ஆடுகளின் கழிவுகள், விளை நிலங்களில், இயற்கை உரமாக பயன்படுத்துவதன் மூலம், நல்ல மகசூல் கிடைத்து வருகிறது.செம்மறி, மாலாடுகளின் கழிவுகள், விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது. அவ்வாறு, மேய்ச்சலுக்கு கொண்டு வரும் செம்மறி ஆடுகளை, பயிர் செய்யும் விளை நிலங்களில், "கிடை' அமைக்க வாடகை கொடுக்கின்றனர். அவ்வாறு, இரவு நேரத்தில், செம்மறி ஆடுகள், கிடைகளுக்குள் உமிழும் சிறுநீர், புழுக்கைகள் போன்ற கழிவுகள், மகத்துவம் வாய்ந்த உரமாக, விவசாயிகள் பயன்படுத்துகின்றனர்.அதனால், செம்மறி ஆடுகளுக்கு, தலா இரண்டு ரூபாய் வீதம், வாடகையாக, ஆடு வளர்ப்பவர்களுக்கு, விவசாயிகள் கொடுக்கின்றனர். இதனால், மாலாடு, செம்மறி, குறும்பை ஆடுகளுக்கு, ஆத்தூர், தலைவாசல் பகுதி விவசாயிகள் மத்தியில், பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

## கிராம அடிப்படை பயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,01:33 IST

நாமக்கல்: நாமக்கல் அடுத்த பட்டணம் கிராமத்தில், உழவர் பயிற்சி நிலையம் சார்பில், இரண்டு நாள், கிராம அடிப்படை பயிற்சி முகாம் நடந்தது.

தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் மோகன் விஜயகுமார் தலைமை வகித்தார். உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் சித்திரைச் செல்வி வரவேற்றார். பட்டு வளர்ச்சித்துறை

இளநிலை ஆய்வாளர் பெருமாள், பட்டு வளர்ப்பின் அவசியம், அதன் பயன்கள் மற்றும் பட்டு வளர்ச்சித் துறையின் மானியத்திட்டங்கள் குறித்து விளக்கினார். வேளாண் அலுவலர் ஜெயமாலா, தோட்டக்கலைத் துறை மானிய திட்டங்கள் குறித்துப் பேசினார்.வேளாண் வணிகத்துறை திட்டங்கள் பற்றி, உதவி வேளாண் அலுவலர் சுப்ரமணியம், மாவட்ட நீர்வடிப்பகுதி வளர்ச்சிப்பணிகள் குறித்து நளினி, கால்நடை பராமரிப்பு மற்றும் திட்டங்கள் பற்றி, கால்நடை உதவி மருத்துவர் டாக்டர் ஆனந்தபாபு ஆகியோர் விளக்கினர்.பண்ணை மகளிர் குழுக்களைச் சார்ந்த விவசாயிகள் பங்கேற்று பயன்பெற்றனர். விவசாயிகளுக்கு, ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை, உழவர் பயிற்சி நிலைய அலுவலர்கள், அட்மா திட்டத்தினர் செய்திருந்தனர்.

**செறிவூட்டப்பட்ட தொழு உரம் தயாரிக்க மானியம் வழங்கல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,01:30 IST

நாமக்கல்: "தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், பண்ணைக் கழிவுகளை பயன்படுத்தி, செறிவூட்டப்பட்ட தொழு உரம் தயாரிக்க, 50 சதவீதம் மானியம் வழங்கப்பட உள்ளது' என, நாமக்கல் வேளாண் உதவி இயக்குனர் ஜோதேடியஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் வட்டாரத்தில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், பண்ணை கழிவுகளை பயன்படுத்தி, செறிவூட்டப்பட்ட தொழு உரம் தயாரிக்க, 50 சதவீதம் மானியம் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ், 15 அடி நீளம், ஆறடி அகலம், இரண்டு அடி ஆழம் உள்ள எரு குழிகள் வெட்டி, அதில் ஒரு ஏக்கருக்கு தேவையான, செறிவூட்டப்பட்ட தொழு உரம் தயார் செய்யலாம்.அதற்கு, 750 கிலோ எரு, 150 கிலோ சூப்பர் பாஸ்பேட், 100 கிலோ யூரியா, இரண்டு கிலோ சூடோமோனஸ், பத்து பாக்கெட் உயிர் உரம் ஆகியவற்றை கலந்து, எருக்குழியில் இட்டு, மேற்புறம் ஈரமண் கொண்டு பூசுதல் வேண்டும். இதை, 15 நாட்களுக்கு ஒருமுறை கிளறிவிட வேண்டும். இரண்டு மாதங்களுக்குள், நன்கு மக்கிய செறிவூட்டப்பட்ட, தரமான தொழு உரம் தயாராகிவிடும். அதற்கு, ஒரு எருக்குழி அமைக்க, 50 சதவீதம் மானியமாக, 2,236 ரூபாய் வழங்கப்படும். பயனடைய விரும்பும் விவசாயிகள், நாமக்கல் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகலாம்.

## ஆதிதிராவிட விவசாயிக்கு வேளாண் திட்டம் வேளாண் உதவி இயக்குனர் தகவல்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,01:28 IST

ராசிபுரம்: "நடப்பு ஆண்டில், ஆதிதிராவிட விவசாயிகளுக்கு, பல்வேறு வேளாண் திட்டங்கள் செயல்படுத்தபட உள்ளது' என, வெண்ணந்தூர் வேளாண் உதவி இயக்குனர் சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:ஆதிதிராவிட விவசாயிகள், குறைந்த நீரைக் கொண்டு அதிக பரப்பில், சாகுபடி மேற்கொள்ள, 50 சதவீத மானியத்தில், தெளிப்பு நீர் பாசனக் கருவிகள், பைப் லைன், மழை தூவான் என்ற ரெயின்கள் ஆகியவை வினியோகிக்கப்படும். பருத்தி, நிலக்கடலை, மக்காச்சோளம், துவரை ஆகிய பயிர்களின் செயல்விளக்கத் திடல்கள் அமைக்க, இடுபொருட்கள், 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது.தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், துவரை செயல் விளக்கத் திடல், நாற்று விட்டு நடப்படும் செயல் விளக்கத்திடலுக்கு, ஹெக்டேருக்கு, 25 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. அதேபோல், துவரை நாற்று விட்டு நடப்படும் திடலுக்கு, ஊக்கத்தொகை ஹெக்டேருக்கு, 7,500 ரூபாய், நெட்டை மற்றும் நெட்டைக் குட்டை தென்னை ரகங்களுக்கு, 7.50 மற்றும், 15 ரூபாய் கன்றுக்கு மானியம் வழங்கப்படுகிறது. பருத்தி விதை வினியோகத்துக்கு, கிலோவுக்கு, 20 ரூபாய், பருத்தி நுண்ணூட்டம் மற்றும் உயிரியல் காரணிக்கு, 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

விதை கிராமத் திட்டத்தின் கீழ் நெல், பயறுவகை, எண்ணெய் வித்து விதைகள், உயிர் உரங்கள் பாதி விலையில் வழங்கப்பட உள்ளது. தீமை செய்யும் பூச்சிக்களை பிடித்து அழிக்க, 50 சதவீதம் விலையில், விளக்கு பொறி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. கைத்தெளிப்பான்களுக்கு, 800 ரூபாய், விசைத் தெளிப்பானுக்கு, 2,000 ரூபாய் மானியம் வழங்கப்படும். பசுந்தாளுர விதையான தக்கை பூண்டு விதைகள், 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும்.தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிக்கும் உரக்குழி அமைக்க, 30 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. அரசு திட்டங்களில், மானிய உதவி பெற விரும்பும் ஆதிதிராவிட விவசாயிகள், வெண்ணந்தூர் வேளாண் விரிவாக்க மையத்தில், முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்து பயன்பெறலாம்.

## விவசாய இடு பொருட்கள் விற்பனை தர்மபுரியில் ஜோர்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,01:24 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், தொடர்ந்து பெய்து வரும் மழையால், விவசாய பணிகளுக்கு தேவையான பொருட்களை விவசாயிகள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில், சில தினங்களாக மழை தொடர்ந்து பெய்கிறது. இதனால், ஆடி

பட்டத்தையும், அதனை தொடர்ந்தும் விவசாயிகள் மானவாரி, உள்ளிட்ட சாகுபடியாக, கடலை, துவரை, எள், சோளம், பருத்தி உள்ளிட்டவைகளை சாகுபடி செய்தனர்.மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையால், பயிர், செடிகளுடன், களைகளும் அதிகளவில் வளர்ந்துள்ளது. இவற்றை களை எடுப்பதற்கும், புதிய சாகுபடிகளுக்காகவும் விவசாயியிகள் தங்கள் பகுதியில் கூடும்,வார சந்தைகள் மற்றும், கடைகளில் ஆர்வத்துடன், தளவாட, பொருட்கள் மற்றும் புதிய சாகுபடிக்கு தேவையான பொருட்களை, வாங்கி வருகின்றனர்.
தர்மபுரி மாவட்டத்தின் பலபகுதிகளில், நேற்று முன்தினம் விடிய, விடிய மழை பெய்தது.இதில் தர்மபுரியில், 48 மில்லிமீட்டர், பாலக்கோட்டில்,26 மி.மீ., பாம்பாறுடேம்,7.6 மி.மீ., வாணியாறுடேம், 11.6மி.மீ., தொப்பையாறு டேம், 13மி.மி.மீ.,நாகாவதி டேம், 5மி.மீ., தும்பலஅள்ளி டேம், 11மி.மீ., என மழையளவு பதிவானது. தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரணமாக, மாவட்டத்தின் பலபகுதிகளில் இருந்து விவசாயிகள், தர்மபுரி சந்தையில் விவசாய பொருட்கள் மற்றும் தளவாட, பொருட்களை அதிகளவில் நேற்று, வாங்கி சென்றனர்.

**நிலையில்லா எண்ணெய் மார்க்கெட்: கொப்பரை விலை ஏற்றத்தாழ்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,01:46 IST

கோபிசெட்டிபாளையம்: எண்ணெய் விலை நிலையில்லால் சென்ற ஒரு மாதமாக கொப்பரை விலை ஏற்றத்தாழ்வாக காணப்படுவதால் கொப்பரை உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.ஈரோடு,கோபி, பெருந்துறை, மொடக்குறிச்சி, அவல்பூந்துறை உள்ளிட்ட பகுதிகளில், 10 லட்சத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன. கோபி சுற்று வட்டாரத்தில் சில இடங்களில் தென்னை மரங்களில் பதநீர் இறக்கி, கருப்பட்டி உற்பத்தி செய்யப்படுகிறது. மற்ற இடங்களில் கொப்பரை உற்பத்தி அதிகளவில் உள்ளது. உற்பத்தி செய்யப்படும் கொப்பரை கோபி, அவல்பூந்துறை உள்ளிட்ட இடங்களில் உள்ள கொப்பரை கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்யப்படுகிறது.கோபி, பெருந்துறை, கொடுமுடி, காங்கேயம் ஆகிய பகுதியில் எண்ணெய் உற்பத்தி ஆலைகள், கொப்பரைகளை கொள்முதல் செய்கிறது. இங்கு உற்பத்தி செய்யப்படம் எண்ணெய் கேரளாவுக்கு அனுப்பப்படுகிறது. கேரளாவுக்கு தேங்காய் எண்ணெய் அனுப்புவது குறைந்து விட்டது. நடப்பு வாரத்தில் தேங்காய் எண்ணெய் விலை திடீரென சரிவு கண்டுள்ளது. எண்ணெய் விலை வீழ்ச்சி காரணமாக கொப்பரை விலை கிலோவுக்கு இரண்டு முதல் மூன்று ரூபாய் குறைந்தது.
ஒரு மாதமாக கொப்பரை விலை கிலோ, 37 முதல் 40 ரூபாய்க்குள் விற்கப்படுகிறது. திடீரென இரண்டு ரூபாய் அதிகரிப்பதும், மூன்று ரூபாய் குறைவதும் என, ஏற்றத்தாழ்வாக இருப்பதால் கொப்பரை உற்பத்தியாளர்கள் கவலையடைந்துள்ளனர்.கொப்பரை உற்பத்தியாளர்கள் கூறியதாவது:கோபி சுற்று வட்டாரத்தில், 1,000 க்கும் மேற்பட்ட தென்னை விவசாயிகள்

கொப்பரை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். கோடை வெயில் காரணமாக கொப்பரை மூன்று நாட்களில் காய்ந்து விடுகிறது. சில வாரங்களாக உற்பத்தி அதிகரித்துள்ளது.சென்றாண்டில் ஒரு கிலோ கொப்பரை, 72 ரூபாய் வரை விற்கப்பட்டது. நடப்பாண்டு துவக்கம் முதலே கொப்பரை விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகிறது. நடப்பு மாதத்தில் ஒரு கிலோ கொப்பரை, 40 ரூபாய்க்குள் விற்கப்படுகிறது. சென்றாண்டை விட நடப்பாண்டு, 30 ரூபாய் வரை குறைந்துள்ளது. கொப்பரை விலை ஏற்றத்தாழ்வு காரணமாக கொப்பரையை விற்கலாமா; வேண்டாமா என்ற குழப்பத்தில் உள்ளனர்.இவ்வாறு அவர் கூறினார்.

**"செம்மறியாடு' வளர்ப்பில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,01:46 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டம் சத்திமங்கலத்தில், செம்மறியாடுகள் வளர்ப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சத்தியில் இருந்து, செம்மறியாட்டின் தோல், இறைச்சி வெளிமாநிலத்துக்கு அனுப்பப்படுகிறது.

தமிழகம் முழுவதும் பருவ மழை பொய்த்துப்போனதால், விவசாய நிலங்கள் யாவும் காய்ந்து கிடக்கிறது. வறுமையில் வாடிய விவசாயிகள் பலரும், தங்களது நிலத்தை கூறு போட்டு, ரியல் எஸ்டேட் புரோக்கர்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்களை விடுத்து, விவசாயிகள் பலரும், ஈமு, நாட்டுக்கோழி, காடை, முயல் வளர்ப்பில் முதலீடு, ஆடு, செம்மறியாடு வளர்ப்பு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளனர். தற்போது, ஈமு, நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டத்தில் முதலீட்டாளர்கள் ஏமாற்றப்பட்டதால், விவசாயிகள் பலரும், ஆடு, செம்மறியாட்டு வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.ஈரோடு மாவட்டம் சத்திமங்கலம், பர்கூர், ஹாசனூர், தாளவாடி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில், செம்மறியாடு வளர்ப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. செம்மறியாட்டின் தோல், இறைச்சிக்கு, வெளிமாநிலத்துக்கு கடும் கிராக்கி உள்ளதால், லாபம் அதிகம் உள்ளதாக, விவசாயிகள் தெரிவித்தனர்.இதுகுறித்து சத்தியமங்கலம் விவசாயி கோகுலகண்ணன் கூறியதாவது: தமிழகம் முழுவதும் போதிய மழை இல்லாததால், விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, மாற்றுத் தொழிலாக, செம்மறியாடு வளர்ப்பில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.பர்கூர், தாளவாடி, ஹாசனூர் மலைப்பகுதியில், செம்மறியாடு வளர்ப்போர் அதிகளவில் உள்ளனர். சத்தியில் இருந்து, வெளிமாநிலத்துக்கு, செம்மறியாட்டின் தோல், இறைச்சி ஏற்றுமதி செய்யப்படுகிறது.குளிர் காலம் நெருங்குவதால், கம்பளி ஆடைகள் விற்பனை அமோகமாக உள்ளது. இதனால், வெளிமாநிலத்துக்கு, செம்மறியாட்டின், தேவை அதிகரித்துள்ளதாலும், முதலீட்டாளர்களை ஏமாற்றாத தொழில் என்பதாலும், செம்மறியாடு வளர்ப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## 577 ஹெக்., ஒருங்கிணைந்த துவரை வளர்ப்பு திட்டம்!

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,01:44 IST

ஈரோடு: ஒருங்கிணைந்த துவரை வளர்ப்பு திட்டத்தில், ஈரோடு மாவட்டத்தில், 577 ஹெக்டேரில் மானிய உதவியுடன் சாகுபடி செய்யப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில், துவரை சாகுபடி தனிப்பயிராக நடப்பதில்லை. ஊடுபயிராக, 1,150 ஹெக்டேரில் நடவு செய்யப்படுகிறது.பர்கூர், தாளவாடி போன்ற பகுதிகளில் அதிகம் சாகுபடி செய்யப்படும். தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிக அளவில் மானாவாரியாக பயிர் செய்யப்படுகிறது.தற்போது, மத்திய வேளாண் திட்டத்தில், ஒருங்கிணைந்த துவரை வளர்ப்பு திட்டத்தில் கீழ் துவரை மகசூல் பரப்பை அதிகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது, ஆந்திரா, குஜராத், மகராஷ்டிரா போன்ற மாநிலங்களில் துவரை அதிகமாக சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது, அனைத்து மாநிலங்களிலும் துவரை சாகுபடி பரப்பை அதிகப்படுத்த திட்டமிட்டு, ஒருங்கிணைந்த துவரை வளர்ப்பு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்படி தமிழகத்தில், 30 ஆயிரம் ஹெக்டேர் மானியத்தில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், ஈரோடு மாவட்டத்தில், 577 ஹெக்டேர் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.வழக்கமாக பாரம்பரிய முறையில், ஒரு ஹெக்டேரில் துவரை சாகுபடி செய்ய, 20 கிலோ விதை தேவை. இத்திட்டத்தில், 2.5 கிலோ விதை போதுமானது. ஹெக்டருக்கு 1.25 டன் மகசூல் கிடைக்கும். இம்முறையில், 2.5 டன் மகசூல் கிடைக்கும்.இத்திட்டத்தில், நான்கு வகைகளில் மானிய உதவி வழங்கப்படுகிறது.

ஒரு ஹெக்டேரில் செயல்விளக்க திடல் அமைக்க, 15 ஆயிரம் ரூபாய் அல்லது ஹெக்டேருக்கு, 15 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை அல்லது, தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில், ஹெக்டேருக்கு, 5,000 ரூபாய், ஆத்மா திட்டத்தில் ஹெக்டேருக்கு, பத்தாயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.எஸ்.ஏ.1 என்ற சேலம் வகை துவரை, 180 நாள் பயிராகும். இதில், நோய்த் தாக்குதலுக்கு வழிகள் உண்டு.தற்போதைய புதிய முறையில், கோ.ஆர்.சி.7 என்ற குறுகிய கால ரகம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 30 நாள் நாற்றுப் பருவத்திலும், பின் நடவு செய்தால், 100 நாளில் மகசூல் பெறலாம்.இம்முறையில், அம்மாபேட்டை, பவானி, அந்தியூர் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது, 246 ஹெக்டேரில், நாற்றுவிட்டு, நடவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.தற்போது, துவரை ஒரு கிலோ, 80 முதல், 85 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒருங்கிணைந்த முறையில் ஒரு ஹெக்டேர் சாகுபடி செய்தால், விவசாயிக்கு, குறைந்த பட்சம், 30 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்க வழி உண்டு.

**தேயிலை ஏலத்தில் 91 சதவீதம் விற்பனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,04:02 IST

குன்னூர் : குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் ஏல மையத்தின் 36வது ஏலத்தில் 12.76 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 9.38 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.38 லட்சம் கிலோவும் அடங்கும்.இந்த வாரம் 91 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் விலை ஏற்றம் கிடைத்தது.

சாதாரண இலை ரகம் கிலோ ஒன்று 72 ரூபாய் முதல் 75 ரூபாய் வரையிலும், உயர் வகை 100 ரூபாய் முதல் 125 ரூபாய் வரையிலும், டஸ்ட் ரகம் சாதாரண வகை 81 ரூபாய் முதல் 84 ரூபாய் வரையிலும், உயர் வகை 100 ரூபாய் முதல் 138 வரையிலும் விற்பனையானது.

"சிடிசி' ரகம் அதிகபட்சமாக ஹோம்டேல் எஸ்டேட்டின் தேயிலை தூள் 167 ரூபாய்க்கும், ஆர்தோடக்ஸ் ரகத்தில் எஸ்டேட்டின் தூள் கிலோ ஒன்று 180 ரூபாய்க்கு விற்பனையானது.

வரும் 14 மற்றும் 15ம் தேதிகளில் நடக்கும் 37வது ஏலத்தில் 11.78 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது. இதில் இலை ரகம் 8.48 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.30 லட்சம் கிலோவும் அடங்கும்.

**வட்டியில்லா பயிர் கடன் முகாமில் 587 விண்ணப்பம்:கலெக்டர் தகவல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,00:52 IST

பெரம்பலூர்: "வேப்பந்தட்டையில் நடந்த விவசாயிகளுக்கான வட்டியில்லா பயிர் கடன் சிறப்பு முகாமில் 587 விண்ணப்பங்கள் பெறப்பட்டது' என, பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது தெரிவித்தார்.

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை யூனியன் விவசாயிகள் பயனுறும் வகையில், வேப்பந்தட்டை தாலுகா அலுவலகம் மற்றும் யூனியன் அலுவலகம் ஆகிய இடங்களில், விவசாயிகளுக்கான வட்டியில்லா பயிர் கடன் சிறப்பு முகாம் நடந்தது. முகாமை பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது துவக்கி வைத்து பேசியதாவது:விவசாயிகளுக்கான வட்டியில்லா பயிர்க்கடன் சிறப்பு முகாமில் வேப்பந்தட்டை யூனியனுக்குட்பட்ட சிறுநிலா, வ.களத்தூர், பசும்பலூர், எறையூர் கிருஷ்ணாபுரம், அரும்பாவூர், தொண்டமாந்துறை, பூலாம்பாடி, கடம்பூர், வெங்கனூர், வெண்பாவூர், வேப்பந்தட்டை, நெய்க்குப்பை, நெற்குணம், நூத்தப்பூர், வி.ஆர்.எஸ்.எஸ்.,புரம், அன்னமங்கலம், தேவையூர் ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்ற, சிறப்பு கவுண்டர்கள் தனித்தனியே அமைக்கப்பட்டிருந்தன.

இந்த கவுண்டர்களில் சம்மந்தப்பட்ட வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்குட்பட்ட கிராமங்களைச்

சேர்ந்த விவசாயிகள் அணு கி, வட்டியில்லா பயிர் கடன் கேட்டு விண்ணப்பங்களை அளித்தனர். பருத்தி, மக்காச்சோளம், நெல், மரவள்ளிக்கிழங்கு, மஞ்சள், கடலை, கரும்பு ஆகியவற்றை பயிர் செய்ய மொத்தம் 587 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. விவசாயிகள் அளித்த விண்ணப்பங்கள் கம்ப்யூட்டர் மூலம் பதிவு செய்யப்பட்டு, விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சான்றும் அளிக்கப்பட்டது.இவ்வாறு அவர் பேசினார்.முகாமில் டி.ஆர்.ஓ., சுப்ரமணியன், ஆர்.டி.ஓ., ரேவதி, திட்ட இயக்குனர் சுமதி, கூட்டுறவு இணைப்பதிவாளர் உமாமகேஸ்வரி, வேப்பந்தட்டை யூனியன்குழு தலைவர் ஜெயலட்சுமி, மத்திய கூட்டுறவு வங்கி களமேலாளர் துரை அரசு, தாசில்தார் ரவிச்சந்திரன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**விவசாயிகள் நலனுக்கு அரசு எப்போதும் பாடுபடும்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,01:19 IST

தஞ்சாவூர்:""டெல்டா பாசன விவசாயிகளின் நலனுக்காக திட்டங்களை செயல்படுத்தி, அவர்கள் வாழ்வில் முன்னேற தமிழக அரசு எப்போதும் பாடுபடும்," என தஞ்சையில் வேளாண்துறை சார்பில் நடந்த கருத்தரங்கில் அமைச்சர் வைத்திலிங்கம் பேசினார்.

தஞ்சை தீர்க்கசுமங்கலி திருமண மஹாலில் முதல்வரின் சம்பா சாகுபடி திட்டம் குறித்த கருத்தரங்கம் நேற்று நடந்தது. இதில் எம்.எல்.ஏ.,க்கள் ரங்கசாமி, ரத்தினசாமி, துரைக்கண்ணு, நகராட்சி தலைவர் சாவித்திரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தஞ்சை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் முகமது யாகியா வரவேற்றார்.கருத்தரங்கில் பங்கேற்ற வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் வைத்திலிங்கம் பேசியதாவது:நடப்பாண்டு வரும் 17ம் தேதி மேட்டூர் அணையில் தண்ணீர் திறக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். பொதுவாக 90 டி.எம்.சி., தண்ணீரை ஜூன், ஜூலை, ஆக., மாதங்களில் கர்நாடகா அரசு தமிழகத்துக்கு வழங்க வேண்டும். காவிரி நடுவர் மன்ற தீர்ப்புப்படி, இடர்ப்பாடு காலத்தில் குறைபட்சம் 45 டி.எம்.சி., தண்ணீராவது வழங்க வேண்டும். ஆனால் இதுவரை 9 டி.எம்.சி., தண்ணீர் மட்டுமே காவிரியில் கர்நாடகா திறந்து விட்டுள்ளது.

இதற்கும் தமிழக முதல்வர் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு, உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார். இதில் பிரதமரை உச்சநீதிமன்றமே கடிந்து கொள்ளும் அளவுக்கு மத்திய அரசின் போக்கு உள்ளது. இந்நிலையில் காவிரி டெ ல்டா பாசன விவசாயிகள் நலனுக்காக கோட்டையில் முதல்வர் ஆலோசனை நடத்தி, சிறப்பு திட்டத்தை அறிவித்துள்ளார்.திருந்திய நெல்சாகுபடி, சமுதாய நாற்றங்கால் திட்டம், வேளாண் கருவி மானிய உதவி உள்ளிட்ட திட்டங்களை பயன்படுத்தினால், குறைந்த செலவில் நிறைந்த உற்பத்தியை பெருக்க முடியும். இதற்காக மேட்டூர் அணையில் தண்ணீர் திறப்பு தேதியை அறிவித்ததுடன், உரிய உதவிகள் விவசாயிகளுக்கு சென்று சேரும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த அரசும், மாவட்ட நிர்வாகமும்

முனைப்புடன் செயலாற்றி வருகிறது.
இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்தும் வகையில், தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வரும் 11ம் தேதி வருவாய், வேளாண், பொதுப்பணித்துறை அதிகாரிகள் அடங்கிய ஆய்வுக்கூட்டம் நடத்தப்படும். டெல்டா பாசன மாவட்ட விவசாயிகளின் நலனுக்காக யார், எந்த கருத்தை கூறினாலும் அதனை ஏற்று செயல்படுத்தும் அரசாகவும், விவசாயிகள் வாழ்வில் முன்னேற பாடுபடும் அரசாகவும் தமிழக அரசு எப்போதும் திகழும்.இவ்வாறு அமைச்சர் பேசினார்.தஞ்சை மாவட்ட வேளாண் துறை துணை இயக்குனர் (மாநில திட்டம்) சீனிவாசன் மற்றும் அலுவலர்கள் அரசின் மானிய உதவிகளை விவசாயிகள் பெறும் வழிமுறை குறித்து விளக்கி பேசினர். முடிவில், வேளாண் துணை இயக்குனர் ராமதாஸ் நன்றி கூறினார்.

**சிறப்பு கிராம சபை கூட்டம் வரும் 12ம் தேதிக்கு மாற்றம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,01:19 IST

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் நிலத்தை மேம்படுத்தும் பட்டியலை மக்கள் பார்வைக்கு வைக்கும் வகையில் நடக்கும் சிறப்பு கிராம சபை கூட்டம் ஒன்பதாம் தேதிக்கு பதிலாக, வரும் 12ம் தேதி நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இதுகுறித்து தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தஞ்சை மாவட்டத்தில் சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் விவசாயிகளின் நிலங்களை மேம்பாடு பணிகளை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதி திட்டத்தில் மேற்கொள்ளுமாறு அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால், இதுகுறித்து ஆதிதிராவிடர், பழங்குடியினர் விவசாயிகளின் நிலக்கைப்பற்று விபரம் அடங்கிய பட்டியல் சிறப்பு கிராமசபை கூட்டத்தில் வைக்க அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.மேலும் இந்த சிறப்பு கிராம சபைக்கூட்டம் தஞ்சை மாவட்டத்தில் 9ம் தேதி நடத்தப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது ஒன்பதாம் தேதிக்கு பதிலாக வரும் 12ம் தேதி சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்தப்படும் என, இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. எ னவே வரும் 12ம் தேதி நடக்கும் கூட்டத்தில் விவசாயிகள் பட்டியலை வைத்து, அங்கீகாரம் பெற விவசாயிகள் ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**உழவர் பாதுகாப்பு திட்டத்தில் 15 பேருக்கு ரூ.1.98 லட்சம் நிதி வழங்கல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,01:19 IST

கும்பகோணம்: சமூக பாதுகாப்பு திட்ட உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், கும்போணம் தாலுக்காவுக்கு உட்பட்ட 15 பயனாளிகளுக்கு 1.98 லட்சம் ரூபாய் நிதியுதவியை எம்.எல்.ஏ., ரெங்கசாமி வழங்கினார்.

கும்பகோணம் ஆர்.டி.ஓ., அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் சமூக பாதுகாப்பு திட்ட உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், திருமண நிதி உதவித்தொகையாக தலா 10 ஆயிரம் ரூபாய்க்கான செக்கை கல்லூர் சுப்பிரமணியன், பெரப்படி மாணிக்கம், விபத்து நிவாரணமாக உத்தமதானி மங்கையர்கரசிக்கு 5 ஆயிரம் ரூபாய், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு தொகையாக பழவாத்தான்கட்டளை சாந்தி, மருதாநல்லூர் முத்துலெட்சுமி, உள்ளூர் மாரியம்மாள், வாளாபுரம் ராமமூர்த்தி ஆகியோருக்கு தலா 12 ஆயிரத்து 500 ரூபாய்க்கான செக், நலிந்தோர் நலத்திட்டத்தின் கீண்ழ் இயற்கை மரணத் தொகையாக பெருமாண்டி மீனாட்சி, பட்டீஸ்வரம் நூர்ஜஹான், சுவாமிமலை நூர்ஜஹான், கும்பகோணம் ஞானமணி, ராஜேஸ்வரி, புனிதவள்ளி, தரணி, ச.ராஜேஸ்வரி ஆகியோருக்கு தலா 10 ஆயிரம் ரூபாய்க்கான செக் என மொத்தம் 1.98 லட்சம் ரூபாய்க்கான தியை, எம்.எல்.ஏ., ரெங்கசாமி பயனாளிகளுக்கு வழங்கினார்.கழ்ச்சியில் ஆர்.டி.ஓ., வெங்கடேசன், முன்னாள் எம்.எல்.ஏ., ராமநாதன், ஒன்றியக்குழு தலைவர் கோவி.மகாலிங்கம், துணைத்தலைவர் சின்னையன், மாவட்ட கவுன்சிலர் குழந்தைவேல், கவுன்சிலர் செல்லதம்பி, அரசு வக்கீல்கள் அறிவழகன், பாலமுருகன், தாசில்தார் துரைராஜ், சமூக பாதுகாப்பு திட்ட தனித் தாசில்தார் பன்னீர்செல்வம் உள்பட பலர் பங்கேற்றனர்.

**சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தில் மானியங்களை பெற விவசாயிக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2012,01:03 IST

திருத்துறைப்பூண்டி: ""விவசாயிகள் நேரடி தெளிப்பு செய்வதன் மூலம் அரசு உரம், உழவு, நெல் விதை மற்றும் நுண்ணூட்ட சத்துகளுக்கு வழங்கும் மானியத்தை விவசாயிகள் பெற்றுக் கொள்ள வேண்டும்," என, வேளாண் உதவி இயக்குனர் நடேசன் தெரிவித்தார்.திருத்துறைப்பூண்டி, வேளாண் உதவி இயக்குனர் நடேசன், டெல்டா மாவட்டங்களுக்கான சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டம் குறித்து கூறியதாவது:விவசாயிகள், நேரடி விதைப்பின் மூலம் ,சாகுபடி பணியினை தொடங்குவதால், உழவு செய்ய ஒரு ஹெக்டேருக்கு, 600 ரூபாய் மானியமாகவும், நெல் விதை, கிலோ ஒன்றுக்கு, அரசாங்கத்தின் மனைவி சூரியகலா கொடுத்த புகாரின்பேரில் ஏழு ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.நேரடி விதைப்பில் களைகளை கட்டுப்படுத்த களைக்கொல்லி, 50 சதவீத மானியம் அல்லது ஹெக்டேருக்கு, 500 ரூபாய், நடவு செய்யும் விவசாயிக்கு, 25 சதவீத

மானியம், அல்லது, 1,125 ரூபாய் மானியத்தில் அடியுரம் வழங்கப்படுகிறது. நுண்ணூட்ட பற்றாக்குறை உள்ள மண் நிலங்களுக்காக ஜிங் சல்பேட், ஜிப்சம், நுண்ணூட்ட கலவை ஏதேனும் ஒன்று, 50 சதவீத மானியத்தில் வழங்கப்படும். நுண்ணுயிர் பாக்கெட்டுகள், 75 சதவீதம் மானியத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏற்படும் கனமழையில் இருந்து பயிரை காப்பாற்ற ,சாவித்திரி நெல் விதையினை செப்டம்பர், 15ம் தேதிக்குள்ளும், மத்திய கால ரகங்களை செப்டம்பர் இறுதிக்குள்ளும் நேரடி விதைப்பு செய்து அரசு வழங்கும் மானிய உதவிகளை விவசாயிகள் பெற்று பயனடைய வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

**வெங்காயம் விலை உயர்ந்தாலும்விவசாயிகளுக்கு மகிழ்ச்சி இல்லை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,06:37 IST

ஆண்டிபட்டி:வெங்காயம் விலை உயர்ந்தாலும், வறட்சியால் விளைச்சல் குறைந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி ஏற்படவில்லை. ஆண்டிபட்டி பகுதியில், சித்தையகவுண்டன்பட்டி, சித்தார்பட்டி, சொக்கத்தேவன்பட்டி, சுந்தரராஜபுரம், பாலக்கோம்பை, ஆவாரம்பட்டி, சேவாநிலையம் உட்பட பல கிராமங்களில் வெங்காய சாகுபடி உள்ளது. பிப்ரவரி, மார்ச் மாதங்களில் வெங்காய உற்பத்தி அதிக அளவில் இருந்தது. அதிக வரத்தால் வெங்காய விலை கிலோ ஆறு ரூபாய் வரை குறைந்தது. இதனால் வெங்காயம் சாகுபடி செய்த பல விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. தொடர்ந்து விளைச்சல் குறைந்ததால், வெங்காய விலை படிப்படியாக உயர்ந்தது. ஆண்டிபட்டி பகுதியில் ஏற்பட்ட வறட்சியால், விவசாயிகள் பலரும் வெங்காய சாகுபடியை தவிர்த்தனர். தற்போது வெங்காய விலை படிப்படியாக உயர்ந்து வருகிறது. ஆண்டிபட்டி பகுதியில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம், மதுரை மார்க்கெட்டில் கிலோ 25 முதல் 30 ரூபாய் வரை விலை போகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஆண்டிபட்டி பகுதியில் 20 டன் அளவில் இருந்த வெங்காய விளைச்சல், தற்போது 10 டன் அளவுக்கு குறைந்து விட்டது. விலை இருந்தும் உற்பத்தி செய்ய முடியாத விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மைசூரு, பெங்களூரு பகுதியில் இருந்தும் தமிழகத்திற்கு தற்போது வெங்காய வரத்து இல்லை. அதனால் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

**மக்காச்சோளத்திற்கு மாறும்கரும்பு விவசாயிகள்**
பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,06:28 IST

பெரியகுளம்:மாவட்டத்தில் கரும்பு விவசாயிகள் பலர், மக்காச்சோள விவசாயத்திற்கு மாறி வருகின்றனர். மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கரில், கரும்பு விவசாயம் செய்யப்பட்டது.கரும்பின் விலை உயர்வதும், குறைவதும் விவசாயிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது. இதனால் சராசரியாக 5 ஏக்கர் கரும்பு விவசாயம் செய்த விவசாயிகள் 3 ஏக்கரில் மக்காச்சோளம் பயிர் செய்துள்ளனர். ஓராண்டு பயிரான கரும்புக்கு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. கரும்பு அறுவடையின் போது விலை இருந்தால், விவசாயிகளுக்கு ஓரளவிற்கு லாபமும், விலை குறைந்தால் மிகுந்த நஷ்டம் ஏற்பட்டு வந்தது. இதனால் விவசாயிகளுக்கு மாற்றுப் பயிராக மக்காச்சோளம் சாகுபடி கைகொடுத்துள்ளது. மக்காச்சோளம் 120 நாட்கள் பயிராகும், 1 ஏக்கருக்கு 7 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. இருந்தபோதிலும் மக்காச்சோளம் பயன்பாடுகள் அதிகரித்துள்ளது. மக்காச்சோள வியாபாரிகள், அறுவடை காலத்தில் தோட்டத்திற்கு நேடியாக சென்று கொள்முதல் செய்கின்றனர். விவசாயிகளுக்கு பணமும் உடனடியாக பட்டுவாடா செய்கின்றனர். தற்போது மக்காச்சோளம் குவிண்டால் 850 முதல் 900 ரூபாய் வரை விற்கப்படுகிறது. விவசாயிகள் பலர் மக்காச்சோள விவசாயத்திற்கு மாறிவருகின்றனர்.

**தேனி உழவர் சந்தையில்காய்கறிகள் விலை குறைவு**
பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,06:24 IST

தேனி:தேனி உழவர்சந்தையில் காய்கறிகளின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளதால், விற்பனை அதிகரித்துள்ளது.தேனி உழவர்சந்தைக்கு நேற்று 74 விவசாயிகள், 60 வகையான 31 டன் காய்கறிகளை கொண்டு வந்தனர். விலை குறைவால் விற்பனை அதிகம் காணப்பட்டது.காலை 10 மணிக்குள் அனைத்து காய்கறிகளும் விற்றுத்தீர்ந்தன.காய்கறிகளின் விலை நிலவரம், கிலோவிற்கு ரூபாயில்: தக்காளி-7, சுரைக்காய்- 4, முருங்கைக்காய்- 7, தேங்காய்- 6, பீட்ரூட்-8, கத்தரி- 14, வெண்டைக்காய்- 20, கொத்தவரங்காய்- 10, பாகல்- 15, பூசணி- 10, உருட்டு மிளகாய்- 25, சம்பா மிளகாய்- 24, முள்ளங்கி- 12, நூக்கல்- 10, டர்னிப்- 16, முட்டைக்கோஸ்- 10, காரட்- 16, முருங்கை பீன்ஸ்- 34, சோயாபீன்ஸ்- 50, பட்டர்பீன்ஸ்- 60, காலிபிளவர்- 8, உருளைக்கிழங்கு- 24, சேனைக்கிழங்கு- 24, மல்லி- 10, கருவேப்பிலை- 20, புதினா- 25, வெங்காயம்- 24,பெரிய வெங்காயம்- 15, கீரைவகைகள்- 5 ரூபாய்.

## நோய் தாக்குதலை தடுக்கும் வழி; சொல்லி தராதவேளாண் அதிகாரிகள்: விவசாயிகள் குற்றச்சாட்டு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,06:15 IST

ராமநாதபுரம்: நடப்பாண்டு பருவ மழையை நம்பி எதிர்பார்த்து காத்திருக்கும் விவசாயிகளுக்கு, நெல் விதைப்பிற்கு முன்னதாகவே பயிர்களை தாக்கும் நோய்களை பற்றி கவலை எழுந்துள்ளது. அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் கலையரசன் கூறியதாவது:கடந்தாண்டு பரமக்குடி, முதுகுளத்தூர், திருவாடனை தாலுகாவிற்கு உட்பட்ட ராஜசிங்கமங்கலம், சோழந்தூரில் ஆயிரக்கணக்கான எக்டேர் நிலத்தில் இலைசுருட்டு புழுக்கள் தாக்கி மகசூல் மிகவும் பாதிக்கப்பட்டது. தற்போது, விதைப்பு பணியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பருவ மழை பொய்த்தாலும், மழை அதிகம் பெய்தாலும் குலை நோய், இலைசுருட்டு நோய் தாக்குதல் அச்சத்தில் உள்ளனர். எனவே, இவர்களுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேளாண் அலுவலர்கள் முன்வரவேண்டும். ஆர்.எஸ்.மங்கலம் விவசாயி ஆறுமுகம் கூறியதாவது: நடப்பாண்டு மழையை நம்பி ஆறு ஏக்கரில் நெல் விதைப்பு செய்துளேன். உரம், விவசாய கருவிகள், விதை நெல் போன்றவை மானிய விலையில் கிடைத்தாலும், நோயை கட்டுப்படுத்துவதற்கு வேளாண் அலுவலர்கள் மூலம் எந்த விழிப்புணர்வும் ஏற்படுத்தவில்லை, என்றார்.வேளாண் அறிவியல் நிலை திட்ட ஒருங்கிணைப்பாளர் கணேசராஜா கூறியதாவது: நெற்பயிர்களை தாக்கும் நோய் பற்றியும், அவற்றை தடுக்கும் விதம் குறித்தும் விவசாயிகளுக்கு ஊர், ஊராக சென்று ஆலோசனை வழங்கி வருகிறோம். நெற் பயிரில் பத்து சதவீதம் நோய் தாக்கியிருந்தால், மருந்து அடிக்க தேவையில்லை. "ட்ரைக்கோகிராமா' என்ற பூச்சி கொல்லி மருந்தும், வெப்பங்கொட்டை கரைசல் ஆகியவற்றை தெளித்து நோயை கட்டுப்படுத்த விவŒõயிகளிடம் அறிவுறுத்தியுள்ளோம்," என்றார்.

## கோட்டைமலையாறு பகுதியில் தண்ணீர் வரத்து குறைந்தது குடிநீர் தட்டுப்பாடு அபாயம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,05:11 IST

புளியங்குடி : புளியங்குடி கோட்டமலையாறு பகுதியில் தண்ணீர் வரத்து குறைந்துள்ளதால் குடிநீர் தட்டுப்பாடு அபாயம் ஏற்பட்டுள்ளது.

புளியங்குடி பகுதி மக்களில் பெரும்பாலானவர்கள் விவசாயத்தையே தங்களின் ஜீவாதார தொழிலாக செய்து வருகின்றனர். மேலும் இப்பகுதியில் எலுமிச்சை மரங்கள் பல ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு எலுமிச்சை பழங்களை விற்பனை செய்வதற்கென பிரத்யோகமான மார்க்கெட் உள்ளது. இங்கு விளைகின்ற பழங்களில் சிட்ரிக் அமிலத்தின் தன்மை அதிகமாக இருப்பதால் எலுமிச்சைகளை போட்டி போட்டு வாங்கி

அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர்.

இந்நிலையில் இப்பகுதி மக்களின் ஜீவாதாரமாகவும், குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்வதும் கோட்டமலையாறு மற்றும் வாலமலையாறு பகுதி ஆகும். மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் அமைந்துள்ள இந்த ஆறுகளில் மழைக்காலங்களில் தண்ணீர் வரத்து அதிகரித்து காணப்படும். ஆற்றுப்படுகைகளிலிருந்து கால்வாய்கள் மூலமாக குளங்கள் மற்றும் கண்மாய்களில் நீரை தேக்கி வைத்து விவசாயத்திற்கு பயன்படுத்தி வந்தனர்.

மேலும் கோடை காலங்களில் கால்நடைகளின் தாகத்தை தீர்க்கவும் பயன்படுத்தி வந்தனர். இதன் மூலம் குடியிருப்பு பகுதிகள் மற்றும் விவசாய பம்புசெட் கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து காணப்பட்டு வந்தன. இந்நிலையில் இந்த ஆண்டு பருவமழை பொய்த்துவிட்ட நிலையில் ஆறுகள், குளங்கள், ஏரிகள், கண்மாய்கள் மற்றும் கிணறுகளில் தண்ணீர் இருப்பு அளவு குறைந்து வறட்சியின் சுவடுகளாக பிரதிபலிக்க துவங்கிவிட்டன.

இதனால் இப்பகுதியில் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்கள் பயிர்களை காப்பாற்ற விலை கொடுத்து தண்ணீர் வாங்கி உபயோகப்படுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மின்தடை, பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பெரும் அவதியடைந்து வந்தனர். இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன் தமிழகத்தில் வெப்பச்சலனம் ஏற்பட்டதையடுத்து பல பகுதிகளிலும் பரவலாக மழை பெய்து வந்த நிலையில் புளியங்குடி பகுதியில் லேசான மழை பெய்தது.

ஆயினும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் போதிய மழை பெய்த நிலையில் ஆற்றுப்படுகைகளில் தண்ணீர் வரத்து சற்று அதிகமாகியது. இதனால் குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டாமல் வினியோகம் செய்யப்பட்டு வந்த நிலையில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து வெயிலின் தாக்கம் அதிகரித்து சாரல் நின்ற நிலையில் ஆற்றுப்படுகைகளில் வந்து கொண்டிருந்த தண்ணீரின் அளவும் கணிசமாக குறையத் துவங்கியுள்ளது.

இதனிடையில் விடுமுறை தினங்களில் இந்த ஆற்றுப்படுகைகளில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் நீராடி வந்தனர். விடுமுறை தினமான நேற்று ஆற்றுப்படுகைகளுக்கு சென்ற பொதுமக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இருப்பினும் வரப்பெற்ற குறைவான தண்ணீரில் பொதுமக்கள் குளித்து சென்றனர். தொடர்ந்து இதே நிலை நீடித்தால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

**ஊரக வேலைவாய்ப்பு திட்ட தொழிலாளர்களை விவசாய பணிக்கு அனுப்ப புது திட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,05:11 IST

சேர்ந்தமரம் : தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் பதிவு செய்த தொழிலாளர்களை விவசாய தொழிலுக்கு அனுப்ப புது திட்டம் தயாராகி வருகிறது.

கிராமப்புறங்களில் உள்ள கூலித் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் தொடங்கப்பட்டது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம். இத்திட்டத்தில் பஞ்., பகுதிகளில் வசிக்கும் ஆண், பெண் கூலித் தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை கொடுக்க 2007ம் ஆண்டு மத்திய அரசு மூலம் அமலுக்கு வந்தது.

நீர்பாசன குளங்களின் சுற்று கரையை உயர்த்துவது, ஆழப்படுத்துவது போன்ற பணிகளை இப்பணியாளர்கள் செய்து வந்தனர். தொடக்கத்தில் தினக்கூலியாக ரூ.80ம் தொடர்ந்து ரூ.100, ரூ.119 எனவும் கடந்த சில மாதங்களாக ரூ.132 வீதம் வாரம் ஒருமுறை பஞ்., நிர்வாகம் மூலம் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த சுமார் 5 ஆண்டுகளில் குளங்கள், தண்ணீர் வரும் கால்வாய்கள் பணிகள் நிறைவு பெறும் நிலையில் உள்ளதால் எதிர்காலங்களிலும் மேற்படி தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு கொடுக்கும் வகையில் அவர்களை தனியார் வயல்கள், தோட்டங்களில் விவசாய பணிக்காக ஈடுபடுத்த திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதற்காக வேளாண்துறை அதிகாரிகள் மூலம் நாடு முழுவதும் உள்ள வருவாய்த்துறை அலுவலர்களிடமும் சிறு மற்றும் குறு விவசாயிகளின் பட்டியலை சேகரித்து வருகிறார்கள்.

இரண்டரை ஏக்கர் வரை உள்ள சிறு விவசாயிகள், அதற்கு மேல் 5 ஏக்கர் வரையுள்ளவர்கள் குறு விவசாயிகள் பட்டியல் சேகரிக்கப்பட்டு வருகிறது. இவர்களின் வயல்கள், தோட்டங்களுக்கு வேலைக்கு ஆட்கள் தேவைப்பட்டால் அவர்கள் பஞ்., அலுவலகத்தில் எத்தனை நபர்கள் தேவைப்படுகிறார்களோ அத்தனை நபர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்தி ரசீது பெற வேண்டும்.

அவர்களுக்கு உரிய சம்பளத்தின் மீதி தொகையை மேற்படி திட்டத்தின் கீழ் மொத்தமாக அவரவர் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டு வாரம் ஒருமுறை பெற முடியும் என்ற கோணத்தில் மேற்படி பட்டியல் தயாரித்து வருவதாக சேர்ந்தமரம் பகுதி வேளாண்மைத்துறை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டம் விரைவில் அமலுக்கு வரும் வகையில் வருவாய்த்துறை மற்றும் வேளாண்மைத்துறை அதிகாரிகளுக்கு அரசு உத்தரவிட்டு பணிகள் அசுர வேகத்தில் நடந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

## 100 நாள் வேலை திட்டத்தில் விவசாய நிலம் மேம்பாடு திருச்சியில் 1.89 லட்சம் சிறு, குறு விவசாயிகள் பயன்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,01:14 IST

திருச்சி: நூறு நாள் வேலை உறுதி திட்டத்தின் கீழ் சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் விவசாய நிலங்களை மேம்படுத்த, கணக்கெடுப்புக்காக திருச்சி மாவட்டத்தில் நேற்று நடந்த சிறப்பு கிராம சபை கூட்டத்தில், ஒரு லட்சத்து 89 ஆயிரத்து 196 சிறு, குறு விவசாயிகள் பட்டியல் வைக்கப்பட்டது.

கிராமப்புறங்களில் உள்ள கூலி, விவசாய கூலி தொழிலாளர்களின் பொருளாதார நிலை மேம்பட வேண்டும் என்பதற்காக நாடு முழுவதும் நூறு நாள் வேலை உறுதித்திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆண்டு தோறும் நூறு நாள் வேலை நிச்சயம் இருக்கும்.இத்திட்டம் பல மோசடிகளுக்கு வழி வகுத்ததோடு, விவசாயத்தின் ஆணி வேரை ஆட்டிப்பார்க்கத் துவங்கியது. விவசாயத் தொழிலுக்கு ஆள் பற்றாக்குறை ஏற்பட்டதால், நூறு நாள் பணியாளர்களை விவசாயத்துக்கு பயன்படுத்த வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது.இதையடுத்து நூறு நாள் வேலை உறுதி திட்டத்தை வரையறுக்க முடிவு செய்யப்பட்டது. நூறு நாள் வேலை திட்டத்தின் கீழ் விவசாய நிலங்களை மேம்படுத்தும் வகையில், தமிழகம் முழுவதும் உள்ள சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் விவசாயிகளின் நிலங்களை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான பட்டியல் தயாரிக்கும் பணி தீவிரமாக நடக்கிறது.

சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் விவசாயிகளின் நிலங்களை மேம்படுத்தும் வகையில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி பஞ்சாயத்துகள் மற்றும் குக்கிராமங்கள் வாரியாக சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் விவசாயிகளின் நிலம் குறித்த விபரங்கள், தொடர்புடைய வி.ஏ.ஓ.,க்கள் மற்றும் வேளாண் அலுவலர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது."விவசாயிகள் நிலக்கைப் பற்று விபரம் அடங்கிய பட்டியலை அங்கீகாரம் செய்யும் வகையில், பஞ்சாயத்து சிறப்பு கிராம சபை கூட்டத்தில் வைக்குமாறு, அலுவலர்களுக்கு உத்தரவிட்டப்பட்டது. அதன்படி திரு ச்சி மாவட்டத்தில் நேற்று 404 பஞ்சாயத்துகளில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் அந்தந்த பஞ்சாயத்தில் உள்ள விவசாயிகளின் முழு விவரமும் வைக்கப்பட்டது.

மொத்தமுள்ள 14 யூனியன்களில் ஒரு லட்சத்து 89 ஆயிரத்து 196 சிறு, குறு விவசாயிகள் உள்ளனர். இதில், 6 ஆயிரத்து 944 எஸ்.சி., 849 எஸ்.டி., மற்றும் 51 ஆயிரத்து 235 பொது என மொத்தம் 59 ஆயிரத்து 28 சிறு விவசாயிகள் உள்ளனர். 17 ஆயிரத்து 613 எஸ்.சி., 1,794 எஸ்.டி., 11 ஆயிரத்து 762 பொது என 11 ஆயிரத்து 762 குறு விவசயிகள் உள்ளனர். கூட்டத்தில் எத்தனை சிறு, குறு மற்றும் பழங்குடியின விவசாயிகள் பங்கேற்றனர் என்ற விவரம் இன்று தெரியும். அதன் பின்னர் நூறு நாள் வேலை திட்டத்தில் மாற்றம் செய்யப்படும்.

**ஆத்தூர் பகுதியில் கடும் வறட்சி விவசாயிகள் வேதன**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2012,05:01 IST

ஆத்தூர் : ஆத்தூர் பகுதியில் தண்ணீர் இல்லாமல் விவசாயம் பாதிப்படைந்துள்ளதால் விளைநிலங்களில் ஆடுகள் மேய விடப்பட்டுள்ளது.

ஆத்தூர் சுற்றுப்பகுதியில் எப்போதும் இல்லாத அளவுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் கால்நடைகள் குடிநீரின்றி தவிப்பதோடு விவசாயமும் பெருமளவில் பாதிப்படைந்துள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டமடைந்துள்ளனர். வாழை மற்றும் வெற்றிலைப் பயிர்கள் தண்ணீரின்றி வாடி கருகி இருப்பதோடு குறைந்த அளவு கூட தென்காலில் தண்ணீர் திறந்து விடப்படாததால் தற்போதுள்ள பயிர்களை காக்கவே விவசாயிகள் பெரும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஆத்தூர் பகுதியில் 6 மாத அளவிற்கு கோடை நீடித்து வெயில் உக்கிரம் காட்டி சுட்டெரித்து வருவதால் நூற்றுக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் பராமரிப்பின்றி வறண்டு பொட்டல் வெளிகளாக காட்சியளிக்கின்றன. மழை வரும் என்று நம்பி ஏமாந்த விவசாயிகள் தென்கால் தண்ணீரும் கிடைக்காததால் செய்வதறியாது திகைத்துள்ளனர். வழக்கமாக நெல் அறுவடைக்குப் பின்னர் ஆத்தூர் மற்றும் ஆறுமுகநேரி பகுதி வயல்களில் மேய்ச்சலுக்காக ஆடுகள் அடைக்கப்படுவதுண்டு. ஆனால் விவசாயிகளின் விரக்தியால் வேறு வழியின்றி கைவிடப்பட்ட விளைநிலங்களில் தற்போது கோடைக்கு தாக்குப்பிடிக்கும் குத்துச்செடிகளும், கோரை புற்களும் மட்டுமே முளைத்து நிற்கின்றது. இதனால் இந்தப் பகுதியில் ஆடுகள் மேய்ச்சலுக்கு விடப்பட்டுள்ளது.

ஏற்கனவே அரிசி விலையோடு போட்டி போட்டுக் கொண்டு வாழை மற்றும் வெற்றிலையின் விலை தாறுமாறாக ஏறி இருக்கும் நிலையில் விளைநிலங்களில் ஆடுகள் தொடர்ந்து மேய்ந்து வரும் காட்சியை பார்க்கும் பொதுமக்கள் எதிர்காலத்தில் விவசாய விளைபொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு அவை கிடைக்காமலேயே போய்விடுமோ என்ற அச்சத்தில் மூழ்கி மனம் பதபதைத்த படியே செல்கின்றனர். தண்ணீரின்றி விவசாயம் முற்றிலம் பாதிப்படைந்து விட்டதால் விவசாயத்திற்கென வாங்கிய கடனை அடைக்க முடியாமலும், வியாபாரிகளிடம் வாங்கியுள்ள

முன் பணத்திற்கு பதில் சொல்ல முடியாமலும் விவசாயிகள் கடும் நெருக்கடியில் சிக்கி அவதியுற்று வருகின்றனர்.

எனவே மழை இல்லாத சூழ்நிலையில் இனியாவது உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுத்து அணைகளில் நீர் மட்டம் உயர்ந்து வரும் நிலையில் பாசனத்திற்கு போதுமான தண்ணீரை திறந்து விட்டு விவசாயத்தையும், பொதுமக்களையும் காக்க வேண்டுமென்பதே அனைவரின் கோரிக்கையாகும்.

**துவரை, உளுத்தம் பருப்பு வகைகள் விலை சரிவு**



சேலம்:வடமாநிலங்களில், பருப்பு அறுவடை துவங்கியுள்ளதால், தமிழகத்துக்கு துவரை, உளுந்து, துவரம் பருப்பு வரத்து அதிகரித்துள்ளது. இதனால், அவற்றின் விலை குறைந்து உள்ளது.விளைச்சல்:கடந்த ஆண்டு பருப்பு விலை, வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்தது. இதனால் ஊக்கமடைந்த, மத்தியபிரதேசம், மகாராஷ்டிரா உள்ளிட்ட வடமாநிலங்களை சேர்ந்த விவசாயிகள், அதிக அளவில் பருப்பு வகைகளை பயிரிட்டனர். இதன் காரணமாக, நடப்பாண்டு பருப்பு வகைகளின் விளைச்சல், 50 சதவீதம் உயர்ந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வடமாநிலங்களில் பயறு, அறுவடை துவங்கியுள்ளது. இத்துடன், பண்டிகை காலமும் துவங்கி உள்ளதால், வடமாநில வியாபாரிகள், தாங்கள் இருப்பு வைத்திருந்த துவரை, உளுந்து உள்ளிட்ட பருப்பு வகைகளை மிக வேகமாக விற்பனை செய்து வருகின்றனர்.இதனால், தமிழகத்துக்கு, பருப்பு வகைகளின் வரத்து அதிகரித்து, அதன் விலையில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம், 7,400 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு குவிண்டால் உளுத்தம் பருப்பு, தற்போது, 200 ரூபாய் குறைந்து, 7,200 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

தமிழக ஆலைகள்:அது போன்று ஒரு குவிண்டால் முதல் ரக துவரம் பருப்பு விலை, 8,400லிருந்து 8,200 ரூபாயாக குறைந்துஉள்ளது. இரண்டாம் ரகம்
8,050லிருந்து 7,800 ரூபாயாகவும், மூன்றாம் ரகம் 7,700லிருந்து 7,500 ரூபாயாகவும் சரிந்துள்ளது.வடமாநிலங்களில் இருந்து, குறிப்பாக, மத்திய பிரதேசத்தில் இருந்து தமிழக

ஆலைகளுக்கு, மிக அதிக அளவில் பருப்பு வகைகள் விற்பனைக்கு வருகின்றன. இது, மேலும் அதிகரிக்கும் என்ற தகவலால், பருப்பு வகைகளை இருப்பு வைத்துள்ள வியாபாரிகள் மத்தியில், கிலி ஏற்பட்டுள்ளது.

கர்நாடகா:செவ்வாய்ப்பேட்டை பருப்பு வியாபாரி சக்கரவர்த்தி கூறியதாவது:தமிழகத்துக்கு தேவையான பருப்பு வகைகள், கர்நாடகாவின், தாவன்கரே, மகாராஷ்டிராவின், குல்பர்கா ஆகிய இடங்களில் இருந்து விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. நடப்பாண்டு, வடமாநிலங்கள் மட்டுமின்றி, கர்நாடகாவிலும் பருப்பு விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால், வரும் நாட்களில் பருப்பு விலை மேலும் குறையும். இவ்வாறு அவர் கூறினார்.

**சணல் உற்பத்தி 12 சதவீதம் குறையும்:**



கோல்கட்டா:நடப்பு 2012-13ம் வேளாண் பருவத்தில், நாட்டின் கச்சா சணல் உற்பத்தி, 95 லட்சம் பொதிகளாக (1 பொதி-180 கிலோ) குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இது, முந்தைய பருவத்தில், மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை விட, (108 லட்சம் பொதிகள்) 12 சதவீதம் குறைவாகும் என, இந்திய சணல் உற்பத்தியாளர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக, நாடு தழுவிய அளவில், 9 லட்சம் ஹெக்டேரில், சணல் பயிரிடப்பட்டு வந்தது. நாட்டின் மொத்த சணல் உற்பத்தியில், மேற்கு வங்கத்தின் பங்களிப்பு, 67 சதவீதம் (6 லட்சம் ஹெக்டேர்) என்ற அளவில் உள்ளது. இதையடுத்து, அசாம், பீகார் மாநிலங்களில், சணல் அதிகம் உற்பத்தி செய்யப்படுகிறது.

மத்திய அரசு, நடப்பு பருவத்தில், சணலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்தியுள்ளது. குறிப்பாக,"டி.டீ.-5' வகை கச்சா சணலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை, குவிண்டாலுக்கு, 2,200 ரூபாயாக நிர்ணயம் செய்துள்ளது. இருந்தபோதிலும், விவசாயிகள் சணல் தவிர்த்து, மாற்றுப் பயிர் உற்பத்தியில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

நடப்பு வேளாண் பருவத்தில், மழைப் பொழிவில் ஏற்பட்ட தாமதத்தால், பல மாநிலங்களில் வறட்சி காணப்படுகிறது. முந்தைய பருவத்துடன் ஒப்பிடும் போது, நடப்பு வேளாண் பருவத்தில், சணல் பயிரிடும் பரப்பளவு, 10 சதவீதம் குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

தினமணி

பவானிசாகர் நீர்மட்டம் 48.66 அடி
First Published : 09 Sep 2012 10:00:47 AM IST

ஈரோடு, செப். 8: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 48.66 அடியாக இருந்தது.
அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,916 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,100 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 4.12 டி.எம்.சி.

தாளவாடி, திம்பம் கிழங்குகள் வரத்து அதிகரிப்பு: நீலகிரி கிழங்கு விலையில் சரிவு
First Published : 09 Sep 2012 09:34:19 AM IST
Last Updated : 09 Sep 2012 09:35:39 AM IST

மேட்டுப்பாளையம், செப். 9: மேட்டுப்பாளையம் மொத்த உருளைக்கிழங்கு மார்க்கெட்டுக்கு தாளவாடி, திம்பம் பகுதி கிழங்குகள் வரத்து அதிகரித்ததால், நீலகிரி கிழங்கு விலையில் மூட்டைக்கு ரூ. 150 வரை சரிவு ஏற்பட்டது.
நீலகிரி மலைப்பகுதியில் விளையும் உருளைக்கிழங்கு, முட்டைகோஸ், காரட், பீட்ரூட், முள்ளங்கி போன்ற காய்கறிகளுக்கு மொத்த விற்பனை மையமாக மேட்டுப்பாளையம் உள்ளது.
இங்குள்ள தனியார் மண்டிகளிலும், நீலகிரி கூட்டுறவு விற்பனை மையத்திலும் நீலகிரியிலிருந்து கொண்டுவரப்படும் உருளைக்கிழங்குகள் தினசரி ஏலம் மூலமாக விற்பனை செய்யப்பட்டு, வெளியூர்களுக்கு அனுப்பப்படுகின்றன.
நீலகிரி கிழங்கு வரத்து குறையும்போது, திம்பம், தாளவாடி, கர்நாடகம், மேற்கு வங்கம், ஆக்ரா, ஜலந்தர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து உருளைக்கிழங்கு விற்பனைக்குக் கொண்டுவரப்படுகின்றன.
ஏல நிலவரம் குறித்து மேட்டுப்பாளையம் உருளைக்கிழங்கு வர்த்தகப் பேரவை துணைத் தலைவர் எம்.என்.கோபால் கூறியது:
மேட்டுப்பாளையத்தில் உள்ள தனியார் மண்டிகளுக்கு நீலகிரி கிழங்கு 26 லோடும், தாளவாடி, திம்பம் பகுதி கிழங்கு 20 லோடும், கர்நாடகத்தின் ஆசனூர் பகுதி கிழங்கு 12 லோடும், கோலார்

பகுதி கிழங்கு 6 லோடும், மேற்கு வங்கம் நைனிடால் பகுதி கிழங்கு 6 லோடும், ஆக்ரா, ஜலந்தர் பகுதி கிழங்கு தலா 1 லோடும் சனிக்கிழமை விற்பனைக்கு வந்தன.
இதில் நடைபெற்ற ஏலத்தில் நீலகிரி கிழங்கு 45 கிலோ கொண்ட மூட்டைக்கு ரூ.850-950 வரையும், பிற பகுதி கிழங்குகள் ரூ.550 முதல் ரூ.850 வரையும் விற்பனையாயின.
கடந்த வாரம் நீலகிரி கிழங்கு 45 கிலோ கொண்ட மூட்டைக்கு ரூ.900-1100 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது தாளவாடி, திம்பம் பகுதிகளில் இருந்து கிழங்கு சீசன் துவங்கி உள்ளதால், மேட்டுப்பாளையம் மார்க்கெட்டுக்கு கிழங்கு வரத்து அதிகமாக உள்ளது. இதனால் சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில், நீலகிரி கிழங்கு மூட்டைக்கு ரூ 150 வரை விலை சரிவு ஏற்பட்டது என்றார்.

## கால்நடை மருத்துவ முகாம்

First Published : 09 Sep 2012 01:16:49 PM IST

கரூர், செப். 8: கரூர் மாவட்டம், கடவூர் ஒன்றியம், சின்னாண்டிப்பட்டியில் அண்மையில் நடைபெற்ற இலவச கால்நடை சிறப்பு மருத்துவ முகாமில் சுமார் 1,100 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.
கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நடைபெற்ற இந்த முகாமுக்கு சீத்தப்பட்டி கால்நடை மருந்தக டாக்டர் அருண்குமார் தலைமை வகித்தார். காளையப்பட்டி ஊராட்சித் தலைவர் லதா முத்துசாமி முகாமை தொடக்கிவைத்தார். முகாமில் சுமார் 1,100 கால்நடைகளுக்கு சினைப் பரிசோதனை, கன்றுகள், ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்துகள் அளிக்கப்பட்டன. கோழிகளுக்கு கழிச்சல் தடுப்பூசி போடப்பட்டது.இதில் மருத்துவர்கள் மணிவண்ணன், வசந்தகுமார், அருண்குமார், கால்நடை ஆய்வாளர் கக்கன், செல்வராஜ், சத்தியமூர்த்தி கிருஷ்ணகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர். சிறந்த கலப்பின கன்று குட்டிகளுக்கு ஊராட்சித் தலைவர் லதா முத்து பரிசுகள் வழங்கினார்.

## ராப்பூசலில் விலையில்லா ஆடுகள் வழங்கல்

First Published : 09 Sep 2012 01:27:36 PM IST

இலுப்பூர், செப். 8: ராப்பூசலில் விலையில்லா ஆடுகள் வழங்கும் நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது.
விராலிமலை சட்டப்பேரவை உறுப்பினர் சி. விஜயபாஸ்கர், 71 பயனாளிகளுக்கு ஆடுகளை வழங்கிப் பேசியது: அனைத்து கிராமங்களும் தமிழக அரசின் திட்டங்களால் வளர்ச்சியடைந்து வருகிறது. கிராம மக்கள் பயன்பெறும் வகையில் பசுமை வீடுகள், விலையில்லா ஆடு, மாடுகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் நடைமுறை படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ஊராட்சிக்கு

ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது, உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது என்றார்.

மாவட்ட கால்நடைதுறை உதவி இயக்குனர் தேவதாஸ், வட்டார வளர்ச்சி அலுவலர் உதயகுமாரி, ஒன்றியக்குழு உறுப்பினர்கள் இளவரசி, செந்தாமரை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

உரம் கடத்தலைத் தடுக்க கண்காணிப்புக் குழு: ஆட்சியர் தகவல்

First Published : 09 Sep 2012 02:14:32 PM IST

விழுப்புரம், செப். 8: விழுப்புரம் மாவட்டத்தில் உரம் கடத்தப்படுவதைத் தடுக்க கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில் ரசாயன உரங்கள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்கு கண்காணிப்புக் குழு அமைத்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தலைமை வகித்துப் பேசியது:

விவசாய உபயோகத்திற்காக ரசாயன உரங்களுக்கு மத்திய அரசு மானியம் வழங்கி வருகிறது. நேரடி விவசாய உபயோகத்திற்கு மட்டுமின்றி, தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட கலவை உரங்கள்(மிக்சர்) தயாரிக்கும் நிறுவனங்கள் மட்டும் மானிய உரங்களை மூலப்பொருளாகப் பயன்படுத்தலாம்.

இது தவிர மற்ற உபயோகங்களுக்கு மானியத்தில் வழங்கப்படும் உரங்களை பயன்படுத்துவது உரக்கட்டுப்பாடு ஆணையின் உத்தரவை மீறிய செயலாகும். தொழிற்சாலைக்கு பயன்படுத்தும் யூரியாவை, டெக்னிக்கல் கிரேடு யூரியா என வாங்கிப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதர மானிய உரங்களான டி.ஏ.பி., பொட்டாஷ் போன்றவற்றை தொழிற்சாலை முகவர்களிடம் இருந்து முழு விலையில் வாங்கி உபயோகப்படுத்தலாம். மாநில அரசு உரங்களுக்கு விதிக்கப்படும் 4 சதவீத மதிப்புக் கூட்டப்பட்ட வரிக்கு விலக்களித்து உள்ளது. ÷இதன் மூலம் தென் மாநிலங்களிலேயே தமிழகத்தில் தான் உரங்கள் விலை குறைவாக உள்ளது. இதனால் பிற மாநிலங்களுக்குக் கடத்தப்படுவதற்கு அதிக வாய்ப்புள்ளது. மாநிலங்களுக்கு இடையே எந்த ஒரு நபரும் உரங்களை மாறுதல் செய்ய முடியாது. ÷மானிய உரங்களை சட்டத்துக்குப் புறம்பாக அண்டை மாநிலங்களுக்குக் கடத்துதல் மற்றும் தொழிற்சாலை உபயோகத்திற்குப் பயன்படுத்தினால் அத்தியாவசிய பொருள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும்.

உரம் கடத்தலைக் கண்காணிக்க காவல்துறை, வணிகத்துறை, வேளாண்துறை, வருவாய்துறை அலுவலர்கள் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு இக்குழு வாகனச் சோதனைகள் மூலம் உரம் கடத்தலைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என்றார் ஆட்சியர்.

இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் த.சேகர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) க.ராஜசேகரன், வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.சண்முகம், துணை ஆணையர் (வணிக வரி) ரா. சந்திரபோஸ் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கால்நடை பராமரிப்பு உதவியாளர் சங்கக் கூட்டம்
First Published : 09 Sep 2012 01:29:17 PM IST

தஞ்சாவூர், செப்.8: தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு உதவியாளர் சங்க தஞ்சாவூர் மாவட்டக் கூட்டம் தஞ்சாவூரில் சனிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு சங்கத்தின் மாவட்ட செயலர் தி. திருநாவுக்கரசு தலைமை வகித்தார். கூட்டத்தில், சங்கத்தின் கோரிக்கையை ஏற்று 1360 பணியிடங்களை நிரப்பிய தமிழக அரசுக்கு நன்றி, உதவியாளர்களுக்கு வழங்கும் சீருடையின் அளவை அதிகரிக்க வேண்டும், அரியலூர்-பட்டுக்கோட்டை இடையே ரயில் பாதை அமைக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநில முன்னாள் பொதுச்செயலர் சே. வெங்கடேசன், பொதுச்செயலர்(பொ) ஜி. கணேச மூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர். மாவட்ட இணைச்செயலர் எம். சந்திரகாசன் வரவேற்றார். நிர்வாகி யு.கீதா நன்றி கூறினார்.

## மேம்பாட்டுப் பணிகள் செய்ய விவசாய நிலங்கள் தேர்வு
First Published : 09 Sep 2012 12:36:35 PM IST

திருவண்ணாமலை, செப். 8: திருவண்ணாமலை மாவட்டத்தில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், மேம்பாட்டுப் பணிகள் செய்ய விவசாய நிலங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், பயனாளிகள் பட்டியல் ஊராட்சி மன்ற அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட ஆட்சியர் விஜய் பிங்ளே தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்ட ஊரகப் பகுதிகளில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்களுக்குச் சொந்தமான நிலங்களில் மேம்பாட்டுப் பணிகளான நிலத்தடி நீர்சேமிப்பு ஆதாரங்கள் அமைத்தல், பாசன வசதிகள், நில மேம்பாட்டு பணிகளை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

வருவாய்த்துறை மற்றும் வேளாண்மைத் துறைகள் மூலம் பெறப்பட்டுள்ள தகுதியான பயனாளிகளின் பட்டியல் தொடர்புடைய ஊராட்சி மன்ற அலுவலகங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இப் பட்டியலில் தகுதியான நபர்களின் பெயர்கள் விடுபட்டிருப்பின் சம்மந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்களை (கிராம ஊராட்சி) அணுகலாம். மேலும் விவரம் அறிய இலவச தொலைபேசி எண் 1299-ல் தொடர்பு கொள்ளலாம். இத் திட்டத்தின் கீழ் தகுதியான விவசாயிகள் பட்டியல் இம் மாதம் 12-ம் தேதி நடைபெறவுள்ள சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில் பொதுமக்களின் ஒப்புதல் பெறப்பட உள்ளது என்று மாவட்ட ஆட்சியர் விஜய் பிங்ளே தெரிவித்துள்ளார்.

## சம்பா நடவு செய்யும் விவசாயிகளுக்கு 25% மானியத்தில் உர விநியோகம்: வேளாண் அதிகாரி தகவல்

First Published : 09 Sep 2012 01:14:52 PM IST

திருத்துறைப்பூண்டி,செப். 8: திருத்துறைப்பூண்டி வேளாண்மை கோட்டத்தில் சம்பா நடவுசெய்யும் விவசாயிகளுக்கு 25சதமானிய விலையில் ஏக்கருக்கு ரூ.1125 வீதம் ரசாயன உரங்கள் வழங்கப்பட உள்ளதாக வேளாண்மை உதவிஇயக்குநர் டி.நடேசன் தெரிவித்துள்ளார்.

டெல்டாமாவட்டங்களுக்கான சம்பா சாகுபடி சிறப்புத் தொகுப்பு திட்டம் குறித்த விவசாயிகளுக்கான விழிப்புணர்வுமுகாம் திருத்துறைப்பூண்டியில் சட்டப்பேரவை உறுப்பினர் கே. உலகநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட வேளாண்மை கோட்ட உதவி இயக்குநர் டி. நடேசன் மேலும் பேசியது:

மேட்டூர் அணை காலதாமதமாக திறக்கப்படும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு விவசாயிகள் நேரடி விதைப்பு செய்ய வேண்டுமென்றும்,நேரடி விதைப்பில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு உழவு செய்ய மானியமாக ரூ.600-ம்,விதை நெல் கிலோவுக்கு ரூ.7 வீதமும்,களைக்கொல்லி வாங்குவதற்கு 50சதமானியம் அல்லது ஹெக்டேருக்கு ரூ.500 வீதமும், நுண்ணூட்ட பற்றாக்குறை உள்ள இடங்களில் சிங்சல்பேட், ஜிப்சம், உள்ளிட்ட நுண்ணூட்டக்கலவை வாங்கிட 50 சதமானியமும், நுண்ணுயிர் பாக்கெட்டுகள் 75 சதமானிய விலையிலும் வேளாண்மைத்துறை சார்பில் வழங்கப்பட உள்ளதாகவும், மேலும் நவம்பர்,டிசம்பர் மாதம் பெய்யும் கனமழையில் பயிர்களைக்காக்கும் வகையில் சாவித்திரி ரகத்தினை செப்.15-க்குள்ளும், நடுத்தரகால ரகத்தினை செப்டம்பர் மாத இறுதிக்குள்ளும் நேரடி விதைப்பு செய்திட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் சுமார் 200 விவசாயிகள் பங்கேற்றனர்.

விவசாயிகள் சங்கத் தலைவர் பி.வி. சந்திரராமன், வேளாண்மை துணை அலுவலர்கள் சங்கர், வேளாண்மை உதவி அலுவலர்கள் சாமிநாதன், ஜோதிகணேசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

வேளாண்மை அலுவலர் ந. தெய்வேந்திரன் நன்றி கூறினார்.

## விரைவுபடுத்தப்பட்ட துவரை சாகுபடி: உணவு பாதுகாப்பு திட்ட ஆலோசகர் ஆய்வு
First Published : 09 Sep 2012 12:39:06 PM IST

வாணியம்பாடி, செப். 8: ஆலங்காயம் வட்டாரத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் விரைவுபடுத்தப்பட்ட துவரை சாகுபடியை தேசிய உணவுப் பாதுகாப்பு திட்ட ஆலோசகர் சாம்செர்சிங் அண்மையில் ஆய்வு செய்தார்.
ஆய்வின் போது வேலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கே.தமிழ்செல்வன், ஆலங்காயம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் ஆர்.காந்தி மற்றும் வேளாண் அலுவலர்கள், துணை வேளாண் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தலையங்கம்: ஆய்வு சரி; முடிவு சரியல்ல!

இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வு மெல்ல மெல்லப் பரவி வரும் வேளையில், அதற்கு எதிரான ஆய்வு முடிவினை அறிவித்துள்ளது அமெரிக்காவில் உள்ள ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகம். இயற்கை வேளாண்மையில் விளைந்த உணவுப்பொருள்களில் (ஆர்கானிக் ஃபுட்) உடல்நலத்துக்கான பயன்கள் இருப்பதாகக் கூறப்படுவதற்கு மிகக் குறைந்த சான்றுகளே உள்ளன என்பதுதான் அந்த முடிவு.
இந்தியாவில் தற்போதுதான் இயற்கை வேளாண் விளைபொருளுக்கான சந்தை தொடங்கியிருக்கிறது. அதன் விற்பனை சுமார் 20% அதிகரித்துள்ளது என்கிறார்கள். இருப்பினும், ரசாயன உரங்களில் விளைந்த அரிசி, பருப்பு, காய்கறிகளைவிட, இயற்கை வேளாண் விளைபொருள்களின் விலை இரு மடங்கு. இதற்கு நுகர்வோர் குறைவு என்றாலும் அண்மைக்காலமாக, உயர் -நடுத்தர வருவாய்ப் பிரிவினரும் இத்தகைய இயற்கை வேளாண் விளைபொருள்களுக்கு மாறத் தொடங்கியுள்ள வர்த்தகச் சூழலில்தான் இந்த ஆய்வு முடிவுகள் ஊடகங்கள் மூலம் இந்தியாவில் பரப்பப்படுகின்றன.
""வேளாண் விளைபொருள்களை மட்டுமே உட்கொள்ளும் பசுக்களின் பாலை ஆய்வு செய்ததில், மற்ற பசுக்களின் பாலில் இருக்கும் புரதம், கொழுப்பு ஆகியவற்றில் பெரிய மாறுபாடு காணப்படவில்லை. உணவு தானியங்களிலும்கூட, இயற்கை வேளாண்மையில் விளைந்தது என்பதால் அதில் கூடுதலாக வைட்டமின் இல்லை. இருப்பினும், இயற்கை வேளாண் உணவுப் பொருள்களில் கொஞ்சம் பாஸ்பரஸ் கூடுதலாக இருக்கிறது. அதைத் தவிர வேறு பயன் இல்லை'' என்று அந்த ஆய்வு சொல்கிறது.
இதையெல்லாம் விடவும், அவர்கள் அதிக அழுத்தம் தரும் வாதம் வேறொன்று இருக்கிறது.
"இயற்கை வேளாண்மையில் விளைந்ததால் மட்டுமே காய்கறிகளும் பழங்களும் 100% ரசாயனங்களே இல்லாமல் இருக்கும் என்று சொல்லிவிட முடியாது. என்னதான் இயற்கை

வேளாண்மையில் விவசாயம் செய்தாலும்கூட, 30% ரசாயனம் காணப்படவே செய்யும்' என்பதுதான் இந்த ஆய்வு சொல்லும் முடிவு. இந்த ஆய்வின் "உண்மையான நோக்கம்' வர்த்தகத்தை முன்வைத்தது என்பதை இந்த முடிவு ஒன்றே வெளிப்படுத்திவிடுகிறது.

ரசாயன உரங்களைப் பயன்படுத்தாமல், இயற்கை வேளாண் முறைகளில் விளைவிக்கப்பட்ட காபி, தேயிலை, வெல்லம், மிளகு போன்ற உணவுப் பொருள்கள் இந்தியாவிலிருந்து சுமார் ரூ.1,000 கோடிக்கு ஏற்றுமதியாகின்றன. இந்த ஏற்றுமதி மேலும் அதிகரிக்கலாம்.

அத்துடன், இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் பழங்கள், காய்கறிகளின் அளவும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. தற்போது 2011-12-ஆம் ஆண்டில் ரூ. 2,830 கோடி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. நிகழாண்டில் பழங்கள் காய்கறி ஏற்றுமதி இலக்கு ரூ.6,420 கோடி! அடுத்த ஐந்து ஆண்டுகளில் 13,000 கோடிக்கு உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு காலமாக, இந்தியாவிலிருந்து வரும் காய்கறி, பழங்களில் ரசாயனக் கலப்பு அதிகமாக இருக்கும் என்கின்ற எண்ணம்தான் ஐரோப்பிய நாடுகளில் இருந்தது. தற்போது அத்தகைய எண்ணம் தகர்ந்துள்ளது. இந்தியாவில் விளைவிக்கப்படும் காய்கறி, பழங்கள் உற்பத்தியில், ஐரோப்பிய நாடுகள் தடைசெய்துள்ள ரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுவதில்லை என்பதால்தான் ஏற்றுமதி அதிகரிக்கிறது.

மேலும், இயற்கை வேளாண்மைக்கு வெளிநாடுகளில் அதிக வரவேற்பு இருப்பதாலும், அதிகவிலை காரணமாக அதற்கு உள்ளூர் சந்தையில் விற்பனை வாய்ப்பு குறைவு என்பதாலும், இயற்கை வேளாண்மையில் விளைவிக்கப்படும் பழங்கள், காய்கறிகளை ஏற்றுமதி செய்வதன் மூலம்தான் வியாபாரிகள் லாபம் பார்க்க முயலுவார்கள். ஆகவே, வளரும் இந்தியச் சந்தைக்கு முட்டுக்கட்டை போடத்தான் இத்தகைய ஆய்வுகள் மூலம், "இயற்கை வேளாண்மையில், உடல்நலனுக்குப் பெரும் நன்மை விளையாது, முழுக்க முழுக்க ரசாயனம் இல்லாமல் இருக்கும் என்று சொல்லிவிட முடியாது' என்றெல்லாம் உலகுக்குச் சொல்கிறார்களோ என்று சந்தேகப்படத் தோன்றுகிறது.

அரசியலில் எதிர்க்கட்சித் தலைவர்கள் மீது எதையாவது சொல்லி அவர்களது வாக்கு வங்கிகளைச் சிதைக்கும் பிரசாரத்தைப் போன்றதுதான், அறிவியல் உலகில் வெளியிடப்பட்டிருக்கும் இத்தகைய ஆய்வு முடிவுகள். மேலெழுந்தவாரியான உண்மை, அடியிழையோடும் உள்நோக்கத்தை மறைத்துவிடும்.

இந்தியாவில் எந்த மண்ணில் எந்தப் பொருள் விளைவித்தாலும், கொஞ்சம் ரசாயனம் இருக்கவே செய்யும். அந்த அளவுக்கு இந்திய மண்ணில் உரத்தைக் கொட்டியுள்ளோம். இந்தியா மட்டுமல்ல, ரசாயன வேளாண்மை செய்யும் எல்லா நாடுகளிலும் இதேதான் நிலைமை.

இயற்கை வேளாண்மையில் விளைந்த உணவுப்பொருளுக்கும் ரசாயன உரம் பயன்படுத்தப்பட்ட உணவுப்பொருளுக்கும் அதிக வித்தியாசம் இல்லை என்பது உண்மையாகவே இருந்தாலும்,

உடல்நலனுக்குத் தீங்கு விளைவிக்கும் பொருள்கள் நிச்சயமாக இல்லை. புற்றுநோயை உருவாக்கும் கார்சியோஜெனிக் போன்ற வேதிப்பொருள்கள் நிச்சயமாக இல்லை.

இந்திய மக்கள்தொகைக்கு ஏற்ப உணவுப் பொருள் உற்பத்தி செய்வது அவசியம் என்பதால், ஒரேயடியாக ரசாயன உரங்களைக் கைவிட்டுவிட முடியாது. அதேநேரத்தில், பாரம்பரிய விவசாய முறைகளையும் நாம் மறந்துவிடக் கூடாது. அந்தந்தப் பகுதியின் மண்வளம், அங்குள்ள இயற்கை உரங்கள், அதற்கேற்ற பயிர்கள் பயிரிட வேண்டும் என்ற கருத்துள்ள விவசாயிகள் அதிகரிக்கும்போது, இயற்கை வேளாண் விளைபொருள்கள் குறித்த ஆய்வுகளை இந்தியாவே நடத்தி, உண்மைகளை வெளிப்படையாகப் பேசுவதுதான் சரியாக இருக்கும்.

யாரோ, எந்த வர்த்தக நோக்கத்துக்காகவோ செய்யும் ஆய்வு முடிவுகள், இங்குள்ளவர்களைக் குழப்ப அனுமதிப்பது கூடாது. நமது மண் வளத்தையும், வருங்காலச் சந்ததியினரின் உடல் வாழ்வையும் பாதிக்காதவரையில் மட்டுமே விஞ்ஞானம் வழங்கும் கொடைகள் ஏற்புடையவை. கண்ணை விற்றுச் சித்திரம் வாங்குதல் கூடாது - அது, மதுபானம் விற்று வழங்கப்படும் நலத்திட்டங்கள் போன்றது!

தினகரன்

மேலூர் அருகே அதிசயம் கன்று ஈனாமல் பால் கொடுக்கும் பசு

மாற்றம் செய்த நேரம்:9/10/2012 7:27:51 AM



*04:37:28*
Monday
2012-09-10

மேலூர்: பசு மாடு ஒன்று கன்று ஈனுவதற்குள் பால் தருகிறது. மதுரை மாவட்டம், மேலூர் அருகே தெற்குத்தெருவை சேர்ந்த விவசாயி வீரப்பா. இவர், கடந்த 2 ஆண்டுக்கு முன்பு பசு மாடு ஒன்றை வாங்கினார். இந்த மாடு ஒரே பிரசவத்தில் 2 கன்றுக் குட்டிகளை ஈன்றது. இந்த கன்றுகளுக்கு தற்போது 9 மாதம். இந்த கன்றுகளில் ஒன்றின் மடியில் பால் சுரக்கிறது. இதனை கிராம மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர். இதுகுறித்து வீரப்பா கூறுகையில், 'பொதுவாக மாடுகள் குட்டி ஈன்றபின்தான் மடியில் பால் சுரப்பது வழக்கம். ஆனால், பிறந்த 9 மாதத்தில் குட்டி ஈனுவதற்கு முன்பே மாட்டின் மடியில் பால் சுரக் கி றது. குட்டி ஈனாமல் பெறப்பட்ட பால் சிரமத்தை ஏற்படுத்தும் என நினைத்து கறந்த பாலை முதல் 15 நாளுக்கு நாய்க்கு கொடுத்தேன். தற்போது எனது குடும்பத்தினர் இந்த பாலை பயன்படுத்தி வருகின்றனர். உரிய தீவனம்

வைத்தால் ஒரு நேரத்திற்கு இரண்டரை லிட்டர் வீதம் பால் கொடுக்கிறது' என்றார். இதுகுறித்து தேசிய பால்வள வாரியம் (இன்டியாஜென்) செயற்கை கருவூட்டல் மைய பணியாளர் காதர்பாட்ஷா கூறுகையில், 'இன்டியாஜென் வழங்கும் சினை ஊசி மூலம் உருவான கன்று இது. உயர்ரக பசுக்களை உருவாக்குவது, பால் உற்பத்தியை பெருக்குவது ஆகியவை இந்த மையத்தின் நோக்கம். இந்த மாடு கன்று ஈனாமல் பால் கொடுத்தாலும், மற்ற பசுக்களின் பாலில் உள்ளதைப்போல் கால்சியம் உள்ளிட்ட பல்வேறு சத்துக்கள் உள்ளன. இந்த மாடு கன்று ஈன்றபின் அதிகளவில் பால் கொடுக்கும்' என்றார்.

குன்னூர் ஏல மையத்தில்

## 91% தேயிலை தூள் விற்பனை



*00:16:06*

Monday

2012-09-10

குன்னூர் : நீலகிரி மாவட்டம், குன்னூரில் உள்ள தனியார் தேயிலை ஏல மையத்தில் நடந்த ஏல விற்பனைக்கு மொத்தம் 12.76 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 9.37 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 3.39 லட்சம் கிலோ அடங்கும். வெளிநாட்டு வர்த்தகர்களும் அதிகளவில் பங்கேற்றனர். இதனால், 91 சதவீதம் தூள் விற்பனையானது. அனைத்து ரகத்துக்கும் கிலோவுக்கு ரூ.3 வரை கூடுதல் விலை கிடைத்தது. இலை ரகம் சாதா கிலோ ரூ.72 முதல் ரூ.75, உயர் வகை ரூ.100 முதல் ரூ.125, டஸ்ட் ரகம் சாதா ரூ.81 முதல் ரூ.84, உயர் வகை ரூ.100 முதல்

ரூ.138 வரை விற்றது.

சிடிசி டஸ்ட் ரகம் அதிகபட்சமாக கிலோ ரூ.167, ஆர்த்தோடக்ஸ் ரகம் ரூ.180க்கும் விற்பனையானது. அடுத்த ஏலத்துக்கு 11.78 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனை க்கு வர தயாராக உள்ளது. பருவமழை பொய்த்ததால் தேயிலை மகசூல் குறைந்தது. எனவே, ஏல மையங்களுக்கு தேயிலை தூள் வரத்தும் குறைந்து வருகிறது. பற்றாக்குறையால் தேயிலை தூளை வாங்குவதில் வர்த்தகர்களிடையே கடும் போட்டி நிலவி வருகிறது. இதனால், சில வாரங்களாகவே 90 சதவீத தேயிலை தூள் விற்யானது.

**வானிலை மையம் அறிவி பு**
**தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவமழை சராசரியாக பெய்துள்ளது**
**நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் மழை மிகவும் குறைவு**

சென்னை, செ .10–

தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவமழை சராசரியாக பெய்துள்ளது. நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் மழை குறைவாக பெய்துள்ளது.

தென்மேற்கு பருவமழை

தமிழ்நாட்டில் இந்த வருடம் தென்மேற்கு பருவமழை சராசரியாக பெய்துள்ளது. திருவ ணாமலை, தேனி ஆகிய மாவட்டங்களில் மட்டும் வழக்கத்தை விட அதிகம் பெய்துள்ளது. திருவ ணாமலை மாவட்டத்தில் 32 செ.மீ. பெய்யவே டும். ஆனால் 38 செ.மீ.மழை பெய்துள்ளது. சென்னை, அரியலூர், கடலூர், காஞ்சீபுரம், தி டுக்கல், கன்னியாகுமரி, காரைக்கால், கரூர், மதுரை, சிவகங்கை உள்பட 20 மாவட்டங்களில் சராசரி அளவை விட குறைவாக பெய்துள்ளது.

கோவை, தர்மபுரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, வேலூர், விழு புரம், திருவள்ளூர், சேலம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் சராசரி மழை பெய்துள்ளது.

குறைவான மழை

நெல்லை மாவட்டம், தூத்துக்குடி மாவட்டம் ஆகியவற்றில் மிகக்குறைவான மழையே பெய்துள்ளது. நெல்லை மாவட்டத்தில் சராசரியாக 11 செ.மீ.மழை பெய் ம். ஆனால் இந்த வருடம் 4 செ.மீ.மழை மட்டுமே பெய்துள்ளது. தூத்துக்குடியில் 4 செ.மீ.மழை பெய்வதற்கு பதிலாக .4 மில்லி மீட்டர் மழைதான் பெய்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் தென்மேற்கு பருவமழை காலத்தில் இதுவரை 18 செ.மீ.மழை பெய்துள்ளது. ஆனால் சராசரியாக 21 செ.மீ.மழை பெய்யவே டும். எனவே இதுசராசரி அளவாகும்.

தமிழ்நாட்டில் இன்று (திங்கட்கிழமை) சில இடங்களில் மழைபெய் ம் என்றும் சென்னையில் ஒரு சில இடங்களில் மழைபெய் ம் என்றும் வானிலை மையம் அறிவித்துள்ளது.

நேற்று காலை 8–30 மணி டன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் ஏற்காடு,சேலம்,

அறந்தாங்கி ஆகிய இடங்களில் தலா 4 செ.மீ. மழை பெய்துள்ளது.
அதிராம்பட்டினம், பா பிரெட்டி பட்டி, ஒமலூர், திரு பத்தூர், முத்து பேட்டை ஆகிய இடங்களில் தலா 3 செ.மீ.மழை பெய்துள்ளது.

இந்த தகவலை சென்னையில் உள்ள வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.

**மழை பொய்த்ததால் வற ட க மாய்கள்–விவசாயிகள் தவி பு**
திருமங்கலம், செ .10–

க மாய்கள் வற டதால் திருமங்கலம் பகுதியில் 30 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் தரிசாக மாறி ள்ளன. மழையை நம்பி நாற்றாங்கால் தயார் செய்த விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

விவசாய நிலங்கள்

திருமங்கலம் தாலுகாவில் திருமங்கலம் மற்றும் கள்ளிக்குடி ஆகிய ஒன்றியங்கள் உள்ளன. இந்த பகுதி யில் உள்ளவர்கள் 80 சதவீதம் பேர் விவசாயத்தை நம்பி வாழ்பவர்கள் ஆவர். திருமங்கலம் மற்றும் கள்ளிக்குடி பகுதியில் சுமார் 40 ஆயிரம் விவசாயிகள் உள்ளனர். சுமார் 30 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்களும், ஏராளமான க மாய்கள், குளங்களும் உள்ளன.

வைகை பாசனத்தில் பயன்பெறும் வகையில் வைகை கால்வாய் த ணீர் விட பட்டால் அதன் மூலம் ஒரு சில க மாய்கள் நிரம்பும். மற்ற அனைத்துக்குமே நிரந்தர ர்வரத்து ஆதாரம் இல்லை. மழை பெய் ம்போது காட்டாறுகளான கவு டன்ஆறு, கு டாற்றில் ஏற்படும் வெள்ள பெருக்கை வைத்தே நிரம்பும்.

கடந்த ஆ டு ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் சுமாராகாவது மழை பெய்தது. அதன் மூலம் ஓரளவுக்கு விவசாயம் நடந்தது. இந்த ஆ டு போதிய மழையின்றி க மாய்கள், குளங்கள் வற டு காண படுகின்றன. வைகை பாசன கால்வாய்களில் த ணீர் வராததால் அவை ம் ம மேடாகி விட்டன. இதனால் இந்த பாசன நிலங்கள் அனைத்துமே தரிசாக மாறிவிட்டன.

கிணற்று பாசனம்

ஒரு சில இடங்களில் மோட்டார் கிணறு வைத்துள்ளவர்கள் கிணற்று ர் இரு பை வைத்து விவசாயம் செய்து வருகின்றனர். தற்போது கிணறு வைத்திருக்கும் விவசாயிகளும், அவர்களை சார்ந்துள்ள விவசாயிகளும் நெல் நாற்று நடவு செய்து வளர்த்து மழையை எதிர்நோக்கி உள்ளனர்.

மானாவாரி நிலமான கரிசல்காட்டு நிலங்களில் விவசாயிகள் சிறு தானியங்கள். பயறு போன்ற தானியங்களை விதைத்துள்ளனர். ஒரு சில இடங்களில் ஏற்கனவே பெய்த மழையால் முன்கூட்டி விதைத்தவர்களுக்கு தானிய பயிர்கள் முளைவிட்டுள்ளன.

இன்னும் 15 நாட்களுக்குள் மழை பெய்யாவிட்டால் மானாவாரி பயிர்களும், விதைக்க பட்ட விதைகளும் வீணாகிவிடும் என விவசாயிகள் கவலை டன் கூறுகின்றனர். எனவே வருணபகவான்தான் அவர்களை கா பாற்ற வே டும்.

**பால் கொள்முதல் விலையை உயர்த்தி அறிவிக்க வே டும்**
**பால் உற்பத்தியாளர்கள் சங்க மாநாட்டில் தீர்மானம்**
முசிறி, செ .10–

பால் கொள்முதல் விலையை உயர்த்தி அறிவிக்க வே டும் என்று தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்க மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்ற பட்டது.

மாவட்ட மாநாடு

முசிறியில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்க திருச்சி மாவட்ட மாநாடு நடைபெற்றது. மாநில தலைவர் முகமது அலி தலைமை வகித்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மாவட்ட செயலாளர் ஸ்ரீதர், விவசாய சங்க மாவட்ட செயலாளர் மாசிலாமணி, பால் உற்பத்தியாளர்கள் சங்க மாவட்ட தலைவர் இந்துராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்க மாநில குழு உறு பினர் ராமநாதன் வரவேற்றார். கூட்டத்தில் நிறைவேற்ற பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

கொள்முதல் விலை

பசும்பால் 1 லிட்டருக்கு ரூ.25, எருமை பாலுக்கு ரூ.35 என கொள்முதல் விலையை உயர்த்தி அறிவிக்க வே டும், ஆவின் தீவன உற்பத்தியை அதிகரித்து 50 சதவீதம் ம ான்ய விலையில் வழங்க வே டும், கர்நாடக மாநிலத்தை போல் பால் உற்பத்தியாளர்களுக்கு 1 லிட்டருக்கு ரூ.3 ஊக்கத்தொகையாக அரசு வழங்க வே டும்.

ஆரம்ப சங்கங்களுக்கு நிர்வாக செலவிற்கு 1 லிட்டருக்கு ரூ.1 வீதம் அரசு மான்யம் வழங்க வே டும், சங்க தேர்தலை உடனடியாக நடத்தி மத்திய அரசிடமி ருந்து வருடாந்திர மான்ய தொகை ரூ.120 கோடி கிடைக்க வழிவகை செய்ய வே டும், தமிழ்நாடு அரசின் குழந்தைகள் சத்துணவு திட்டத்தில் பாலும் வழங்க வே டும்.

கால்நடை பராமரி பு
உதவியாளர் பணி

சுமார் 8 ஆயிரம் ஆரம்ப கூட்டுறவு சங்கங்களிலுள்ள சுமார் 25 ஆயிரம் பணியாளர்களுக்கு பணி நிரந்தரமும், அரசு மான்யத்தில் சம்பள உயர்வும் வழங்கிட வே டும், ஆவின் பால் விற்பனையை தமிழகம் முழுவதும் அதிக படுத்துவதற்கு மாநில இணையம் 17 மாவட்ட ஒன்றியங்களிலும் விரிவான நடவடிக்கைகளை பால் வளத்துறை தொடங்கிட வே டும்.

தற்போது கால்நடை பராமரி பு உதவியாளர் பணிக்கு நேர்முகத்தேர்வு நடைபெற உள்ளது. எனவே சங்கத்தில் பணியாற்றி வரும் கிராமநிலை பணியாளர்களுக்கு கால்நடை உதவியாளர் பணிக்கு நியமனம் செய்ய வே டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்ற பட்டன.

கலந்து கொ டவர்கள்

மாநாட்டில் சு ரமணியன், துறையூர் சங்க மாவட்ட தலைவர் காசிராஜன், விவசாய சங்க மாவட்ட தலைவர் சிதம்பரம், பட்டம்மாள், விவசாய சங்க மாவட்ட தலைவர் முத்துசாமி உள்பட பலர் கலந்து கொ டனர். முடிவில் சங்க மாவட்ட செயலாளர் வரதராஜன் நன்றி கூறினார்.

**சம்பா சாகுபடிக்கு தடையின்றி த ணீர் வர**
**காவிரியில் உள்ள உடை பை சீரமைக்க விவசாயிகள் கோரிக்கை**

தொட்டியம், செ .10–

காட்டு புத்தூர் பகுதி வாய்க்கால்களில் சம்பா சாகுபடிக்கு த ணீர் தடையின்றி வர காவிரியில் உள்ள உடை பை சீரமைக்க வே டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாசன வசதி

நாமக்கல் மாவட்டம் ஒருவந்தூர் காவிரியாற்றில் உள்ள ஆணைக்கல், ஈஸ்வரன் கோவில் பகுதியில் கொரம்பு அமைந்து தொட்டியம் அருகே உள்ள காட்டு புத்தூர் பகுதியில் காட்டு புத்தூர் கிளை வாய்க்கால், சீலை பிள்ளையார்புத்தூர் வாய்க்கால், ஸ்ரீராமசமுத்திரம் வாய்க்கால், நத்தம் வாய்க்கால்கள் மூலம் ஏராளமான விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகிறது. இங்கு அமைக்க படும் கொரம்பு கடந்த மாதம் 15–ந் தேதி டன் முடிவடைந்துவிட்டது.

தற்போது மேட்டூர் அணையில் போதிய அளவு த ணீர் இல்லாததால் காவிரியில் இருந்து இந்த வாய்க்கால்களுக்கு த ணீர் வரத்து குறைந்து வருகிறது. இதனால் தற்போது சம்பா சாகுபடிக்கு நாற்று விடுவது சிரமமாக உள்ளது.

சீரமைக்க கோரிக்கை

காவிரியில் தற்போது வரும் த ணீரை வைத்து சாகுபடி செய்தால் வறட்சியில் களை முளைத்து விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலை உருவாகி விடும். எனவே காவிரியில் உள்ள கொரம்பின் உடை பை அடைத்து அதை சீரமைத்தால் மட்டுமே சம்பா சாகுபடிக்கு த ணீர் தடையின்றி கிடைக்கும் என விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இது குறித்து ஸ்ரீராமசமுத்திரம் விவசாய சங்கத்தலைவர் ஆர்.சீனிவாசஅய்யர், செயலாளர் எஸ்.லட்சுமணன் ஆகியோர் கூறுகையில், போர்க்கால அடி படையில் காவிரியில் உள்ள கொரம்பின் உடை பை சரி செய்து காட்டு புத்தூர் பகுதி வாய்க்கால்களுக்கு த ணீர் கிடைக்க வழிவகை செய்யவே டும். இ பகுதியில் உள்ள தாத்துகட்டை வடிகால் ஓடையை தூர் அகற்றி மழைக்காலங்களில் த ணீர் வடிய நடவடிக்கை எடுக்க வே டும் என்றனர்.

**வறட்சியை சமாளிக்கும் வகையில்**
**நெல் பயிரை கா பீடு செய்ய வே டும்**
**வேளா அதிகாரி வே டுகோள்**
நெல்லை, செ .10–

வறட்சியை சமாளிக்கும் வகையில் நெல் பயிரை கா பீடு செய்ய வே டும் என்று முக்கூடல் வேளா மை உதவி இயக்குனர் செந்தில்குமார் கூறிஉள்ளார்.

இதுபற்றி அவர் வெளியிட்டு உள்ள செய்தி குறி பில் கூறிஇரு பதாவது:–

கா பீட்டு திட்டம்

பிசான பருவத்தில் பா பாக்குடி வட்டாரத்தில் ஒருசில விவசாயிகள் நெல் பயிர் நடவு செய்து வருகின்றனர். தற்போது நடைபெற்று வரும் நெல் சாகுபடிக்கு மழை மிக குறைவாகவும், காலத்துக்கு பெய்யாமலும் உள்ள சூழ்நிலையில் நெல் பயிரை பயிர் செய் ம் விவசாயிகள் தங்களது பயிரை இயற்கை சீற்றங்களில் இருந்து பாதுகாக்க தேசிய வேளா கா பீட்டு திட்டத்தின் கீழ் கா பீடு செய்து கொள்ளலாம்.

“ராஷ்ட்ரிய கிரிசி பீமாயோசனா” என்ற தேசிய வேளா மை கா பீடு திட்டத்தில்

உணவு தானியங்கள் நெல், பயறு, பருத்தி, கரும்பு ஆகிய பயிர்களை வறட்சி, பூச்சி மற்றும் நோய் தாக்குதல், மழை வெள்ளம், மின்னல், சூறாவளி ஆகியவற்றின் காரணமாக ஏற்படும் பயிர் சேதங்களை விவசாயிகள் எதிர்கொள்ளும் வகையில் பயிர்கள் கா பீடு செய்ய படுகின்றன. இதில் பா பாக்குடி வட்டாரத்துக்கு நெல் மற்றும் வாழை பயிர்கள் இந்த ஆ டு கா பீடு செய்ய தேர்வாகி உள்ளது.

நெல் பயிர்களுக்கு...

நெல் விவசாயிகள், தங்கள் ஒரு ஏக்கர் நெல் பயிரை தேசிய வேளா கா பீடு திட்டத்தில் கா பீடு செய்ய செலுத்த வே டிய மொத்த பிரிமிய தொகையில் மானியம் போக மீதம் உள்ள பிரிமியத்தொகையை செலுத்தலாம். அதாவது கடன் பெறா சிறுகுறு விவசாயிகள் ரூ.78—ம், இதர விவசாயிகள் ரூ.87—ம் செலுத்த வே டும். இந்த தொகையை வேளா மை துறை மூலமாகவும் அல்லது நேரடியாக தொடக்க வேளா மை கூட்டுறவு கடன் சங்கத்திலும் செலுத்தி, அதற்கான வி ண பத்தில் விவரங்களை பூர்த்தி செய்து கா பீடு செய்யலாம்.

இவ்வாறு கட்ட வே டிய பிரிமியத்தொகையை வருகிற 10—12—2012 தேதிக்குள் செலுத்தி தங்களது நெல் பயிரை கா பீடு செய்து தங்களுக்கு இயற்கையினால் ஏற்படும் இழ பீடுகளை தவிர்த்து, விவசாயம் செய்து வாழ்வில் வளம் பெறலாம்.

இவ்வாறு முக்கூடல் வேளா மை உதவி இயக்குனர் செந்தில்குமார் கூறிஉள்ளார்.